34°/24°

உதயன்

பதிப்பு: ★ 24
விலை: ரூபா 25

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

■சுடர் 28 ■கதிர் 126 ■வள்ளுவர் ஆண்டு 2044 ■பங்குனி 19, திங்கள் 01.04.2013

# வடக்கில் தேர்தலை நடத்த விடமாட்டோம்

## போராட்டம் வெடிக்கும்

கடும்போக்கு சிங்கள அமைப்புகள் மிரட்டல்

கொழும்பு, ஏப்ரல் 1

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதால் நாட்டுக்குப் பாதிப்பே உண்டாகும். இது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பானது. எனவே எமது கோரிக்கையை மீறி அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அனுமதிக்கோம். நாடெங்கும் பெரும் போராட்டங்களை முன்னெடுப்போம்- இவ்வாறு பேரினவாத அமைப்புக்கள் மிரட்டல் விடுத்துள்ளன.

வெறும் மிரட்டலோடு மாத்திரம் நிற்காமல் வடமாகாணசபைத் தேர்தலுக்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்டி நாடளாவிய ரீதியில் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் கடும் போக்குடைய சிங்கள அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது எனவும், சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் முதற்கட்டப் போராட்டங்களை ஆரம்பிப்பதற்கு மேற்படி அமைப்புகள் தீர்மானித்துள்ளன எனவும் தெரியவருகின்றது.

வடமாகாணசபைத் தேர்தலை செப்

பார்க்க பக்கம் 04

# பா.ஜ.கட்சி ஆட்சிக்கு வந்தால் ஈழத் தமிழருக்கு நிரந்தரத் தீர்வு

■ தமிழகத்தவர் ஒற்றுமை முக்கியம் என்கிறார் இல.கணேசன்

சென்னை, ஏப்.1

தமிழ்நாட்டுத் தமிழர்களின் ஒற்றுமையால் மட்டுமே ஈழத் தமிழர்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த முடியும் என்று பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் மாநில முன்னாள் தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், காங்கிரஸ் கட்சி ஒரு குடும்பத்தின் நலனுக்காக. ஒரு இனத்தையே பழிவாங்கி வருகிறது. மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சேலத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைத் தமிழர் நலன்களைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்

பார்க்க பக்கம் 04

# 5,000 ரூபா! அவதானம்!!

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். குடாநாட்டில் தற்போது போலி நாணயத் தாள்களை புழக்கத்துக்கு விடும் ஆசாமிகள் சிலர் நடமாடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களில் இந்தக் கில்லாடிகள் யாழ். நகர விற்பனை நிலையங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றில் பொருள்களை வாங்கியோ, சாப்பிட்டு விட்டோ இந்தப் போலி நாணயத் தாள்களை மாற்றிக் கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பெரும்பாலும் 5,000 ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்களைக் கொடுத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் அறிமுகமற்ற நபர்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு வர்த்தக வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

குறிப்பாக யாழ். நகரின் கரையோரப் பகுதிகளில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் ஒடித்திரியும் மூவரடங்கிய குழுவொன்று இவ்வாறான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்

பார்க்க பக்கம் 04

சந்திரிகா – ஷிராணி – அனோமா

# அரசுக்கு எதிராக பெண்கள் கூட்டு

கொழும்பு, ஏப்.1

தேசிய அரசியல் களத்தில் முக்கிய மூன்று பெண் பிரபலங்களை இறக்குவதற்கான பேச்சுகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா ஆகிய மூவரையுமே கூட்டாகக் களமிறக்குவதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

இனிவரும் காலப்பகுதியில் நடைபெறவுள்ள தேர்தல்களைக் கருத்திற்கொண்டே எதிர்க்கட்சிகளின் முக்கிய புள்ளிகள் சிலர் இவர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ள அந்த மூவரும் அரசியல் களத்தில் நிச்சயம் குதிப்பர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இது குறித்து உத்தியோகபூர்வமாக இன்னும் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்த திரிசூலப் பெண்கள் குழு அரசியலில் ஈடுபடும் பட்சத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு

பார்க்க பக்கம் 04



# ஈழத் தமிழருக்கு ஆதரவாக நடிகர்கள் நாளை களத்தில்

சென்னை, ஏப்.1

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நாளை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக நடிகர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக நடிகர் சங்கத்தின் தலைவரான சரத்குமாரும், பொதுச் செயலாளரான ராதாரவியும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தென்னிந்திய நடிகர் சங்கம் மற்றும் தமிழ் கலை உலகினர் சார்பாக இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணா

பார்க்க பக்கம் 04

# கிளி. காட்டுமிராண்டிச் செயல்; அரசுக்கு நேரடியாகத் தொடர்பு

■ சர்வதேச விசாரணைக்கு சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.1

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம் மீது அரசின் அனுமதியுடன் இராணுவம், பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த புலனாய்வாளர்களும், அரசின் அடிவருடிகளும் நடத்திய அராஜகம் மூலம் வடக்கில் காட்டாட்சி எந்தளவிற்கு உச்சமடைந்துள்ளது என்பதை சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ளவேண்டும். எனவே, சர்வதேசம் இந்தச் சம்பவங்களுக்கு கண்டனங்களை மட்டும் வெளி

பார்க்க பக்கம் 04

**இன்று முட்டாள்கள் தினம்**
**அன்புசால் வாசகர்களே!**

இன்று ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் நாள். உங்களை முட்டாளாக்கப் பலரும் முனைவார்கள். எனவே உதயன் உங்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கின்றான். உதயனிலும் 3 செய்திகள் முட்டாள்கள் நாள் செய்திகளாகவே பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து விட்டீர்களானால் உங்களை நீங்களே ஒரு தடவை உச்சி முகர்ந்து பாராட்டிக் கொள்ளுங்கள்.

# விலை கூட்டி மகேஸ்வரி நிதியம் மணல் விற்றது சட்டவிரோதம்

■ மேன்முறையீட்டு நீதிமன்று அதிரடித் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உருவாக்கப்பட்ட மகேஸ்வரி நிதியம் அதிக விலையில் மணல் விற்பனையில் ஈடுபட்டமை சட்டவிரோதமானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் அள்ளப்பட்ட மணல் யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கும் ஏகபோக உரிமையை மகேஸ்வரி நிதியம் சில காலம் கொண்டிருந்தது. வெறும் 286.50 ரூபா மட்டுமே பெறுமதியான

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படமாகிறது முள்ளிவாய்க்கால் படுகொலை

வன்னியில் இறுதிப் போரின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் இனப்படு கொலை தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டி அதனை திரைப்படமாகத் தயாரிக்க உள்ளதாக தென்னிந்திய திரைப்பட இயக்குநர் பாரதி ராஜா அறிவித்துள்ளார்.

புலம்பெயர் ஊடகவியலாளர்களின் கோரிக்கையை ஏற்று தான் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பாரதி ராஜா தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் லண்டனில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்றவேளை, அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப்படு கொலைகள், போர்க்குற்றங்கள் தொடர்பிலான ஆவணங்கள் சர்வதேச ஊடகவியலாளர்களால் பாரதிராஜாவிடம் கையளிக்கப்பட்டன.

இவற்றை வைத்து தனது படம் வெகுவிரைவில் உருவாகும் என அவர் உறுதியளித்தார். (ஐ)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் நெல்லியடி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சில கிராமங்களுக்கு விஜயம் செய்து பொது மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடியவர்கள் ஆவர்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரமாகக் கேட்டறிந்ததுடன் அவர்களுக்கு இன்றைய அரசியல் நிலவரம் குறித்தும் தெளிவுபடுத்தினார்கள்.

நெல்லியடி மற்றும் வடமராட்சி கிழக்கில் அம்பன், நாகர்கோவில், குடத்தனை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களையே இவர்கள் சந்தித்து உரையாடினார்கள். (8)

# வடக்குத் தேர்தல் மூலமே தமிழருக்கு நிரந்தரத் தீர்வு

### கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.01

வடக்கு மாகாண சபைத் தேர்தல் சிவில் சமூகப் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து ஜனநாயகமான முறையில் நடத்தப்பட்டால் மட்டுமே தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப்பெறும்.

இவ்வாறு கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'சமகால அரசியலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தினரின் பங்கு' எனும் தொனிப்பொருளிலான கருத்துப் பகிர்வு நேற்றுமுன்தினம் யாழ். மூர்த்தி கலர் லாப் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு சமகால அரசியல் தொடர்பாக கருத்துரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்னர் மக்களது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. மூவின மக்களும் தமது ஜனநாயகத்தை இழந்துள்ளதாகவே தமது உரிமைகள் தொடர்பாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இனங்களுக்கிடையில் வேறுபாடு நிலவும்போது எப்படி நல்லிணக்கம் உள்ளது என்று சொல்ல முடியும். போரின்போது பிரபாகரனும் அவரது குடும்பமும் தமிழ் மக்களும் கொலை செய்யப்பட்ட பின்னர் சிங்கள மக்கள் தாம் வென்றுவிட்டதாகவும் தமிழ் மக்கள் தாம் தோற்றுவிட்டதாகவும் நினைத்துக் கொள்கின்றனர்.

ஆனால் பொதுவாகவே போரின் பின்னர் இலங்கை அரசும் இராணுவமும் வென்ற பின்னர் ஜனநாயகம் என்பது இல்லை. தென் பகுதியிலும் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மக்களது பிரச்சினைகளை, எதிர்பார்ப்புக்களை நன்கு அறிவார்கள். ஆனால் நாம் எங்களது ஜனநாயக உரிமைகளை இழந்தே நிற்கிறோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எதிர்க்கட்சிகள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகளும் நம்பிக்கை இல்லாத நிலைமையையே மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளனர். தெற்கிலும் அதே நிலைதான்.

சிவில் அமைப்புக்கள் ஒரு பலமான அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் மக்கள் மத்தியில் உள்ளன.

வடக்கு மக்களின் அரசியல் சுதந்திரம் பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இதற்கு மாகாண சபைத் தேர்தல் ஊடாக நியாயமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள அரசு தாம் தோற்றுப் போவோம் என்று நினைத்தால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வராது. ஏனென்றால் உள்ளூராட்சி மன்றங்களில் கூட தோல்வியை எதிர்கொள்ள முடியாத அரசே உள்ளது.

சிவில் சமூக அமைப்புகள் அழுத்தம் கொடுப்பதன் மூலம் தேர்தலை நடத்த வேண்டும்.

ஜெனிவாத் தீர்மானம் எமக்குச் சரியான ஒரு தீர்வைப் பெற்றுத் தர முடியாது. சரியான அரசியல் தீர்வு கிடைக்கப்பெற்றால் மட்டுமே ஜனநாயகமாக நல்லிணக்கத்துடன் தமிழ் மக்கள் வாழ முடியும்.- என்றார். (ம-14)

## ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு

நகரங்களுக்கு இடையிலான கடுகதி மற்றும் தபால் ரயில் சேவைக் கட்டணங்கள் 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு இன்று நடைமுறைக்கு வருகின்றது என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நான்கு பிரிவுகளின் அடிப்படையில் இந்த கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்றாம்தர வகுப்புக்கான கட்டணங்கள் 150 ரூபாவிலிருந்து 180 ரூபாவாகவும், 220 ரூபாவிலிருந்து 280 ரூபாவாகவும், 270 ரூபாவிலிருந்து 320 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாந்தர வகுப்புக்கான ஒதுக்கப்பட்ட ஆசனக் கட்டணங்கள் 220 ரூபாவிலிருந்து 280 ரூபாவாகவும் 380 ரூபாவிலிருந்து 450 ரூபாவாகவும் 450 ரூபாவிலிருந்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் முதற்தர வகுப்புக்கான கட்டணம் 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பார்வையாளர் பிரிவுக்கான கட்டணம் 880 ரூபாவிலிருந்து 1,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ள அதே வேளை, உறங்கும் பிரிவுக்கான கட்டணம் 1,250 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்கு இரட்டைக்குடியுரிமை

கொழும்பு, ஏப்.1

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் இரட்டை குடியுரிமையை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இரட்டை குடியுரிமை வழங்கப்படும் போது, செயற்படுத்தப்பட வேண்டிய புதிய சட்டத்திருத்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். இரட்டை குடியுரிமை வழங்கப்படும் போது, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# பாலச்சந்திரனின் படுகொலை தொடர்பில் இலங்கைத் தூதுவர் தடுமாற்றக் கருத்து

கொழும்பு, ஏப்.1

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து. முன்னுக்குப் பின் முரணான கருத்தை வெளியிட்டுள்ளார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம்.

இந்தியாவின் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த முரண்பட்ட கருத்தைத் தெரிவித்தார்.

பாலச்சந்திரனின் கொலை தொடர்பாக வெளியான ஒளிப் படங்கள் குறித்து, இலங்கை அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதா என்ற கேள்விக்கு,

''அந்தப் படங்கள் மாற்றம் செய்யப்பட்டவை. அந்தப் படம் எடுக்கப்பட்ட பதுங்கு குழி இலங்கை இராணுவத்தினருடையது அல்ல என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்'' என்றார்.

**பாலச்சந்திரனின் படுகொலை தொடர்பான படங்களை முதலில் எம்முடன் பகிர்ந்து கொண்டிருந்தால், அதுகுறித்து அரசு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கும் என்றார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் காரியவசம்.**

பிறிதொரு இடத்தில் ''பாலச்சந்திரனின் படுகொலை தொடர்பான படங்களை முதலில் எம்முடன் பகிர்ந்து கொண்டிருந்தால், அதுகுறித்து அரசு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கும். அவற்றை ஊடகங்களில் வெளியிட்டு நீதி கோரப்பட்டுள்ளதால், அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று கூறியுள்ளார்.

படம் மாற்றம் செய்யப்பட்டது என்று கூறியுள்ள அவரே, இன்னொரு கட்டத்தில் தம்மிடம் அதனை முதலில் தந்திருந்தால் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்க முடியும் என்று கூறியிருப்பது குழப்பத்தை உண்டு பண்ணி உள்ளது.

குறித்த செவ்வியில், மாற்றம் செய்யப்பட்ட படம் குறித்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் உறுதியான பதிலை அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு – சென்னை விமானங்களில் வெறும் இருக்கைகள்

கொழும்பு, ஏப்.1

தமிழ்நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிவுறுத்தலை அடுத்து கொழும்பில் இருந்து சென்னைக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை 30 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்திய நுழைவு விசா பெறுவோரின் எண்ணிக்கையும் 10 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலை அடுத்து, சென்னைக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை பாதியாக குறைத்துள்ள நிலையில் பயணிகள் எண்ணிக்கையும் 30 சதவீதத்தால் குறைந்துள்ளதாக சிறிலங்கன் எயர்லைன்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இன முரண்பாட்டைத் தூண்ட பாதுகாப்புச் செயலர் முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் ஹக்கீம்

கொழும்பு, ஏப். 1

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொதுபல சேனா அமைப்பின் கூட்டங்களில் கலந்து கொள்வதன் மூலம் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்களை நடத்த ஊக்குவிக்கிறார் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

பிக்கு ஒருவர் தலைமையிலான குழுவொன்று, அண்மையில், பெப்பிலியான பிரதேசத்தில் உள்ள பெசன் பார்க் நிறுவனத்தின் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பொதுபல சேனாவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இனங்களுக்கு இடையில் விரோதத்தையும், குரோதத்தையும் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் அரசு துரித நடவடிக்கை எடுக்காது போனால், அது தொடர்பாக சர்வதேசத்தின் கவனம் திரும்பும் எனவும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பினால், தொடர்ந்தும் இலங்கை முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பாக அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு தாம் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்து விட்டார் எனவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

தனது கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படும் என உறுதியளித்தார். எனினும், அது போதுமானதல்ல என்பதே எனது நிலைப்பாடு எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு தொல்லை கொடுக்கும் ஆலய ஒலிபெருக்கிச் சாதனங்கள்

வலி. வடக்கு, ஏப். 01

சங்கானைப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் நேரகாலமின்றி பாவிக்கப்படும் ஒலிபெருக்கி சாதனங்களால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து ஒலிபெருக்கி சாதனங்கள் அதிகாலை முதல் நள்ளிரவு வரையில் ஒலிக்கவிடப்படுகின்றன.

இந்த நிலையில் மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் பாதிப்படைவதுடன் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் தற்போது பரவலாக ஒலிபெருக்கி பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒலி பெருக்கியை பாவிக்கும் ஆலயங்கள் மனிதாபிமான அடிப்படையில் ஆலய சுற்றாடலில் அமைதியான முறையில் ஒலி பெருக்கியை பாவிக்க உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## பழம்பெரும் ஏட்டுச் சுவடிகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப் 01

பழம்பெரும் ஏட்டுச் சுவடிகளின் பிரதிகளை ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றது.




இந்து மாமன்றத் தலைவர் க.நீலகண்டன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாத சுவாமிகள் சுமார் ஆயிரத்து எண்ணூறுக்கும் அதிகமான வேத ஆகமம், ஆயுள்வேதம், சங்ககால, சோழர், பல்லவர் கால பழைய முக்கியத்துவம் மிக்க ஏட்டுச் சுவடிகளின் நவீன மயப்படுத்தப்பட்ட வன் தகட்டு பேழையை இந்து மாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகனிடம் கையளித்தார்.

முன்னதாக நல்லூர் சிவன் கோயிலில் விஷேட பூசைகள் இடம்பெற்று இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்கள், சிவ தொண்டர்கள், இந்து குருமார்கள், நல்லை ஆதீன முதல்வர், ஆன்மிகவாதிகள், பேராசிரியர்கள் உட்பட பொதுமக்கள் சுவடிப் பிரதிகள் கொண்ட பேழையை ஊர்வலமாக இந்து மாமன்றத்துக்கு எடுத்து வந்தனர்.

திருமுறை வழிபாட்டுடன் ஆசியுரையை சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் ஆகியோரும் தொடக்கவுரையை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் வாழ்த்துரையை பேராசிரியர்கள் ப.கோபாலகிருஷ்ணர் ஐயர், எஸ்.சிவசாமி, ந.வேதநாதன் ஆகியோரும் பிரதம விருந்தினர் உரையை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய பிரதித் தூதுவர் வீ.மகாலிங்கமும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் சைவ சித்தாந்தப் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர் ஒவ்வொருவருக்கும் பிரதித் தூதுவர் வி.மகாலிங்கம் மடிக்கணினி வழங்கினார். (ம-7)

## நாயை அடித்துக் கொன்று கிணற்றில் வீசிய விசமிகள்

இரவில் நடமாடுவதற்கு இடைஞ்சலாக காணப்பட்ட நாயை அடித்துக் கொன்று பாவனையற்ற கிணற்றில் வீசியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் வளர்க்கப்படும் நாய் இரவு வேளைகளில் வீதியில் நடமாடுவோரைக் கண்டால் நீண்ட நேரம் குரைத்துக் கொண்டிருக்கும். நாய் இரவு 11.30 மணிக்கு பின்னர் வீதியில் நடமாடுவோரைக் கண்டு குரைத்ததாகவும் பின்னர் அதன் சத்தத்தைக் காணவில்லை எனவும் காலையில் பார்த்த போது அருகிலுள்ள பாவனையற்ற கிணற்றில் நாய் இறந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ம-9)

## இளைஞனின் துணிவால் இயங்கும் தெல்லிப்பழை சந்தியிலுள்ள சந்தை



வலி. வடக்கு, ஏப். 1

தெல்லிப்பழை சந்திக்கு அண்மையாக கடந்த பல வருடங்களாக இயங்காது இருந்த பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தை இளைஞன் ஒருவனின் தற்துணிவான நடவடிக்கை காரணமாக மீள இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த பல வருடங்களாகக் குறிப்பிட்ட சந்தை புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் கைவிடப்பட்டு இருந்தது. எனினும் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் சந்தையை புனரமைக்கும் நடவடிக்கைகளை வலி. வடக்குப் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சந்தையில் தற்போது நவாலியில் இருந்து வந்து மீள்குடியமர்ந்த இளைஞன் ஒருவர் தனது தொழில் முயற்சியை மேற்கொள்ளும் முகமாகக் குறித்த சந்தைப் பகுதியில் மரக்கறிக் கடையை நடத்தி வருகிறார். அத்துடன் கோழி இறைச்சிக் கடையும் இயங்க ஏற்பாடாகி வருகிறது.

சந்தைக் கட்டட சுற்றாடல் பற்றைகள் நிறைந்து காணப்பட்ட போதிலும் மக்கள் நடமாட்டம் ஏற்பட்டுள்ள நிலையில் அது புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# அரசியல்வாதிகளுக்காகவே வடக்கில் அபிவிருத்திப் பணி

### மக்களுக்காக இல்லை என்கிறார் வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர்

*யாழ்ப்பாணம், ஏப்.1*

*வடக்கில் அரசியல்வாதிகளின் வருகைளுக்காக மட்டுமே அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன. மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.*

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான கருத்துப் பகிர்வு நேற்றுமுன்தினம் யாழ். மூர்த்தி கலர்லாப் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்துப் பகிர்வில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சார்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் இருந்து அரசியல் கட்சி சார்ந்த ஒருவர் வருவதாக இருந்தால் மட்டும் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

அபிவிருத்திகளும் இடம்பெறுகின்றன. இவை எதுவும் மக்கள் நலனுக்காகச் செய்யப்படவில்லை.

தமிழ் மக்களது கலாசாரம் அழிந்து போகிறது, பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. இதனைப் பற்றிக் கவனிப்பார் இல்லை.

கடந்த காலத்தில் - குறிப்பாக குறிக்கப்பட்ட ஒரு காலத்தில்- பெண்கள் வீதியில் சுதந்திரமாக நடமாடினார்கள். அது எந்தக் காலம் என்று மக்களுக்கே தெரியும். ஆனால் தற்போது பாதுகாப்பு ஒரு கேள்விக்குறியானதாகவே உள்ளது.

யாழ். மாவட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கூட ஜனநாயக சுதந்திரம் இழந்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆயுதப் போராட்டம் முடிந்து அகிம்சைப் போராட்டம் எனும் நிலைதான் தற்போது உள்ளது. எமக்கு நியாயமான சமஉரிமையுடன் சுதந்திரமான வாழ்வு வேண்டும் என்பதே அரசிடம் நாம் கேட்பது.

சிவில் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து அதற்கான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழர்களுக்கு நல்லதொரு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.- என்றார். (ம-14)

## திருத்தப்படாத வீதிகள் குறித்து அதிகாரிகளின் நடவடிக்கை தேவை

தென்மராட்சி,ஏப்.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள புனரமைக்கப்படாத வீதிகள், தொடர்பாக பிரதேச உயர் அதிகாரிகள் விசேட திட்டம் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீதிகள் ஒழுங்கைகள் காணப்படுகின்றன.

இவை அந்தந்த உள்ளூராட்சி சபைகள், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான வீதிகள் 50 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தவையாக உள்ளன. பிரதேச சபை உருவாக முன்னர் பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை மற்றும் சச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய கிராம சபைகள் இயங்கி வந்தன. 30 வருடங்களுக்கு முன்னர் அந்தந்த கிராம சபை உறுப்பினர்களின் முயற்சியால் போடப்பட்ட வீதிகளும் பழுதடைந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

**வருடாவருடம் முன்னுரிமை அடிப்படையில் ஒரு சில வீதிகளே புனரமைக்கப்பட்டு வருகின்றன.**

1986 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்ட போது இந்த ஆறு கிராம சபைகளும் சாவகச்சேரி பிரதேச சபைக்குள் உள்ளடக்கப்பட்டு தலைமை அலுவலகம் கொடிகாமத்திலும் ஏனையவை உப அலுவலகங்களாகவும் இயங்கி வருகின்றன.

பிரதேச சபைக்கு வருடாவருடம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியில் முன்னு [illegible] பட்டு வருகின்றன.

அவையும் குறிப்பிட்ட காலத்தில் பழுதடைந்து போவதால் அவற்றை மீண்டும் மீண்டும் புனரமைக்க வேண்டிய தேவைகள் ஏற்படுகின்றன. இதனால் ஏனைய வீதிகள் புனரமைக்கப்படாததால் நூற்றுக்கணக்கான சிறு வீதிகள் மணல் வீதிகளாகவே காணப்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு பிரதேசத்தில் உள்ள உயர் அதிகாரிகள், குழுவினைத் தெரிவு செய்து அதன் மூலம் அரசிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் நிதிகளைப் பெற்று பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்க வேண்டு [illegible] தெரிவிக் [illegible] (ம-9)

## குடாநாட்டில் மதுபாவனையை கட்டுப்படுத்துவதற்கு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1

குடாநாட்டில் மதுப்பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் தலைவர் ரி.பிறேமராஜா இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது பரவலாக மதுபாவனையாளர் அதிகரித்துள்ளனர். இதன் விளைவாக கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக இளைஞர்கள் வழிதவறிப் போகின்றனர்.

இந்த நிலையில் நல்லதொரு இளைஞர் சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் முக்கிய வேலைத் திட்டமாக மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி இதனை முன்னெடுத்துள்ளது.

உடுவில், தெல்லிப்பழை, கரவெட்டி, ஊர்காவற்றுறை ஆகிய 4 பிரதேசங்களில் தற்போது இந்தச் செயற்றிட்டம் முதற்கட்டமாக இடம்பெற்று வருகின்றது.

மதுபாவனையாளர்களை நேரடியாகச் சென்று சந்தித்து மது அருந்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள், சமூகத்துக்கு, ஏற்படக் கூடிய தாக்கங்கள், குடும்பத்துக்கான பாதிப்புகள் தொடர்பான கருத்துரைகளை வழங்கி வருகின்றோம்.

மதுபாவனையாளர்கள் இதன் மூலம் மதுபாவனையை குறைத்து எதிர்காலத்தில் அதனை நிறுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றோம்.- என்று தெரிவித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டம் சிங்களவருக்கும்

கொழும்பு, ஏப்.1

வன்னியில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கு இந்திய வீட்டுத் திட்டம் பயன்படுத்தப்பட்டு வருவதை, இலங்கை இராணுவத்தின் வன்னிப் படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு வாரஇதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் வன்னித் தளபதி தெரிவித்துள்ளதாவது:-

இந்திய வீட்டுத் திட்டத்தில் சிங்களக் குடும்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வன்னியில் சொந்தக் காணிகள் உள்ள சிங்கள மக்கள் இந்தத் திட்டத்துக்கு உரித்துடையவர்கள்.

வன்னியில் 6000 சிங்களவர்களை அவர்களின் சொந்தக் காணிகளில் மீளக் குடியேற்றியுள்ளோம். இவ்வாறு குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மேலும் உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் -என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை இந்தியா அமைத்துக் கொடுக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்திருந்தார்.

சிங்களவருக்கான வீட்டுத் திட்டத்தில் முதல் கட்டமாக வவுனியாவில் போகவெவ என்ற சிங்களக் குடியேற்றக் கிராமத்தில் 50 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன என்று மற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது. (ஐ-400)

## அரசுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கடும் அரசியல் நெருக்கடிகள் ஏற்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அரசியலுக்கு வரும் முன்னோடியாகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், முன்னாள் பிரதம நீதியர சர் ஷிராணியும் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத் துக்கு இணைந்து வந்தனர் என்றும் அரசியல் களத்தில் பேசப்படுகின்றது. சந்திரிகா அம்மை யாருக்கு அரசியல் களத்தில் முழு அனுபவம் இருந்தாலும், ஷிராணிக்கும் அனோமா பொன் சேகாவுக்கும் அரசியல் களம் புதிது என்பது குறிப்பிடத்தக்கது. (ங-சி)

## 5,000...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டது. கடந்த சனியன்று பாஷையூர்ப் பகுதியில் போலி 5,000 ரூபாவைக் கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்ய முயன்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த தமிழையும் சிங்களத்தையும் பேசக் கூடிய இருவர் கூட்டுறவுக் கிளையொன்றில் ஒரு பொருளைக் கொள்வனவு செய்து 5,000 ரூபாவைக் கொடுத்தபோது, முகாமையாளர் பணத்தைப் புரட்டிப்புரட்டிப் பார்த்திருக்கிறார். அவர் அந்தத் தாள் அசலானதா என்பதை உறுதிப்படுத்த முற்பட்டவேளை, ''என்ன சந்தேகமா, காசைத் தாங்கோ மாற்றிக் கொண்டு வாறம்'' என்றவாறு வாங்கிய பொருளையும் விட்டுவிட்டு 'நைசாக' மாறிவிட்டனர்.

அதே ஆசாமிகள் அந்தப் பகுதியில் உள்ள உப தபாற் கந்தோருக்குச் சென்று முத்திரைகள் வாங்கி 5,000 ரூபாவைக் கொடுக்க, உப தபாலதிபரும் சந்தேகப்படவே அங்கிருந்தும் மறைந்துவிட்டனர் என்றும் அவர்கள் வைத்திருந்த பையில் 5,000 ரூபா தாள்கள் பெரிய கட்டாக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சமூக விரோதிகள் குறித்து வியாபாரிகள், பொதுமக்கள் அவதானமாக நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.(ஓ-135)

## ஈழத் தமிழருக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

விரத அறப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இலங்கையில் இனப் போரால் பாதிக்கப்பட்ட எம் தொப்புள் கொடி உறவுகளான தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான, சுதந்திரமான நல் வாழ்வுக்காக நாளை செவ்வாய்க் கிழமை தி.நகரில் உள்ள அபிபுல்லா சாலையில் உள்ள தென்னிந்திய நடிகர் சங்க வளாகத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், கில்டு, திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் அதில் இணைக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்கள், விநியோகத்தர்கள் சங்கம், திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கம், சின்னத்திரை நடிகர்கள் சங்கம், சின்னத்திரை எழுத்தாளர்கள் சங்கம், பி.ஆர்.ஓ.க்கள் சங்கம் ஆகிய அனைத்து சங்கங்களும் கலந்து கொள்கின்றன. தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (வ-14)

## பா.ஜ.கட்சி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டது. இந்தத் தீர்மானத்தை முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் செயல்பாடு அனைவருக்கும் தெரிந்ததுதான். இருப்பினும், அந்தத் தீர்மான விவகாரத்தை மத்திய அரசு எவ்வாறு கையாண்டது என்பது ஒரு தவறான முன் உதாரணத்துக்கு சாட்சியாகி உள்ளது.

இந்தத் தீர்மானம் ஒரு மாநில முதல்வர், பிரதமருக்கு அனுப்பிய மனு போன்றது அல்ல. ஒட்டு மொத்த தமிழக மக்களின் உணர்வை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் தீர்மானம்.

இதுகுறித்து மத்திய அரசு உரிய முறையில் பரிசீலனை நடத்தி முடிவு எடுக்காமல், வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தால் சாதாரணமாக நிராகரிக்கப்பட்டது.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி எப்போதும் மதிப்பு அளிக்காது என்பதற்கு இது மற்றொரு உதாரணம். இந்தியாவில் பல்வேறு சட்டப்பேரவைகள் உள்ளன. ஆனால், ஒரு சட்டப்பேரவையில் மட்டுமே இதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறியுள்ள சல்மான் குர்ஷித்தின் கருத்து கண்டனத்துக்குரியது.

இலங்கைத் தமிழர் நலனுக்காக, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு நடுநிலைத் தன்மை கொண்ட தலைவரின் தலைமையில் அணிவகுக்க வேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்களின் ஒற்றுமையால் மட்டுமே, இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படச் செய்ய முடியும் என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பே கூறினார்.

அவரது இந்தக் கருத்து இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது. காங்கிரஸ் கட்சி ஒரு குடும்பத்தின் நலனுக்காக, ஒரு சமுதாயத்தையே பழிவாங்கி வருகிறது. மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்.

தமிழகத்தில் தன்னெழுச்சியாக மாணவர் போராட்டம் வெடித்து வருவது பாராட்டத்தக்கது. இருப்பினும், தேர்வு நேரம் என்பதால், மாணவர்கள் இந்த பிரச்சினையை கைவிட்டு படிப்பைத் தொடர வேண்டும் - என்றார் இல.கணேசன்.(ங-சி)

## விலை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மணலை இந்த நிதியம் போக்குவரத்துச் செலவைக் காரணம் காட்டி 13,000 ரூபாவுக்கு விற்பனை செய்தது.

மகேஸ்வரி நிதியத்தின் இந்தப் பகற்கொள்ளையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் இந்த வழக்கில் வாதாடி இருந்தார்.

சில நாள்களுக்கு முன்னர் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. மணலை விநியோகிப்பதற்காக மகேஸ்வரி நிதியம் மேலதிக வருமானங்கள் எதனையும் பெறமுடியாது எனவும் அது சட்டத்துக்குப் புறம்பானது எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமாராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்று நடைபெற்ற பொதுமக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மணலை மக்களுக்கு வழங்குவதற்கான அனுமதியை அந்தந்த மாவட்ட செயலர்களே வழங்க வேண்டும். ஆனால் யாழ். மாவட்டத்தில் அந்த அனுமதியைப் பெறுவதற்கு முன்னர் மகேஸ்வரி நிதியத்துக்குப் பணத்தைச் செலுத்த வேண்டியிருந்தது.

ஒரு பாரம் மணல் ரூபா 286.50க்கே விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால் அதே பாரம் மணல் இங்கு ரூபா 13 ஆயிரத்துக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தாக்கல் செய்த வழக்கில் நான் முன்னிலையாகி வாதாடியிருந்தேன். இந்த வழக்கின் தீர்ப்பு நான்கு தினங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது.

மணல் பெறுவதற்கான அனுமதிக்காக மகேஸ்வரி நிதியம் பணத்தை அறவிடுவது சட்டத்துக்கு முரணானது. மணல் பெறுவதற்கான அனுமதியை மாவட்ட செயலரே வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது- என்றார். (உ-ங-8)

## வடக்கில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரெம்பர் மாதமளவில் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை அரசு மேற்கொண்டுவரும் நிலையிலேயே, வடக்குத் தேர்லுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை நடத்துவதற்கு சிங்கள அமைப்புகள் தீர்மானித்துள்ளன. இது குறித்த அறிவிப்பை இன்னும் சில நாள்களில் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் பகிரங்கமாக அறிவிக்கவுள்ளது. இதற்கென விசேட ஊடக்வியலாளர் மாநாடொன்றும் நடத்தப்படவுள்ளது.

வடக்குத் தேர்தல் எதிர்ப்புப் போராட்ட விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் உறுப்பினரொருவர் தெரிவித்ததாவது:-

''வடக்குத் தேர்தலை நடத்தக்கூடாது என நாம் அரசுக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆயினும் அது குறித்துக் கவனம் செலுத்தாது வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முனைப்புக் காட்டுகின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜெனிவாவில் ஒன்றையும், இங்கு வேறொன்றையும் அரசு கூறுகின்றது. வடக்குத் தேர்தலை நடத்துவதானது 13ஆம் திருத்தத்தை வழங்குவது போன்றதாகும். எனவே, அரசு கண்ணை விழித்துக் கொண்டே குழியில் விழக்கூடாது.

வடக்குத் தேர்தலை நடத்தக் கூடாது என நாம் கூறியதை அரசு சாதகமாகப் பரிசீலிக்கத் தவறியுள்ளதால் சிங்கள மக்களை அணிதிரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்களில் இறங்கவுள்ளோம். அனேகமாக புத்தாண்டுக்குப் பின்னர் இந்தப் போராட்டங்கள் நிகழும்''- என்றார். (ங-சி)

## கிளி.காட்டுமிராண்டி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யிடாது இலங்கை அரசு மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடைபெறும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், தேர்தல் தொடர்பில் கிளிநொச்சியில் கூட்டமைப்பு நடத்திய முதலாவது மக்கள் சந்திப்புக் கூட்டத்தை குழப்பியடிக்கும் நோக்கில் அரச மேலிடத்தின் அனுமதியுடன் இந்தத் தாக்குதல் அரங்கேற்றப்பட்டுள்ளது என்றும் சம்பந்தன் குற்றம்சாட்டினார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தவேளை அங்கு அத்துமீறி நுழைந்தவர்கள் சரமாரியாகக் கற்களை வீசி மக்கள் மீதும், அலுவலகம் மீது தாக் குதல் நடத்தி பெரும் அராஜகத்தைப் புரிந்துள்ளனர். இதில் 20இற்கு மேற்பட்ட மக்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு தமது கண்டனத்தைத் தெரிவித்து கருத்து வெளியிடும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் நேற்று 'உதயனி'டம் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணம் 24 மணித்தியாலங்களும் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. எனவே, அங்கு எந்தவொரு நிகழ்வும் அரசின் அனுமதி இல்லாமல் அல்லது இராணுவம், பொலிஸ் ஆகியோரின் பாதுகாப்பு இல்லாமல் நடைபெறாது.

இந்நிலையில், கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தின் மீது அராஜகம் புரியப்பட்டுள்ளது. இதில் எமது மக்கள் 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மயிரிழையில் தப்பியுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் நடந்த இடத்தில் நான் இருக்கவில்லை. எனினும், அந்த இடத்தில் நின்ற எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனக்கு வழங்கிய தகவல்கள் மற்றும் தொலைக்காட்சிகள், பத்திரிகைகளில் நான் பார்த்த காட்சிகளினூடாக மக்கள் மீதும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் மீதும் கல்லெறித் தாக்குதல் நடத்தியவர்கள் தலைமயிரை கட்டையாக வெட்டி அரைக் காற்சட்டையுடனும், நீளக் காற்சட்டையுடனும் நின்றுள்ளார்கள். இவர்களைப் பார்க்கும்போது சாதாரண மக்கள் போலத் தெரியவில்லை.

அதாவது இராணுவம், பொலிஸ் பிரிவைச் சேர்ந்த புலனாய்வாளர்களின் தோற்றத்துடன் உள்ளார்கள். எனவே, குறித்த தாக்குதலில் அரசின் அனுமதியுடன் இராணுவம், பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த புலனாய்வாளர்களும், அரசின் அடிவருடிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தாம் நாட்டை நேசிப்பவர்கள் என்பதைக் காட்டுவதற்காக நாட்டின் தேசியக் கொடியான சிங்கக்கொடியை கைகளில் ஏந்தி வந்துள்ளனர். இவர்கள் கேட்டுக் கேள்வி இல்லாமல் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டமைப்பின் கூட்டத்திற்குள் அத்துமீறி நுழைந்து அலுவலகம் மீதும், மக்கள் மீதும் கல்லெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

அத்துடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் மீதும் கல்லெறித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். நாட்டை நேசிப்பவர்கள் என்று தேசியக்கொடியைக் காட்டி தம்மை அடையாளம் காட்ட முனைந்தவர்கள் இவ் [illegible]

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தமக்குத் தொடர்பில்லை எனக் கூறும் இராணுவத்தினரும், பொலிஸாரும் தாக்குதல் நடைபெறும் போது ஏன் கைகட்டி அமைதி காத்தார்கள்? தேசியக் கொடிக்கு மரியாதை கொடுக்காமல் நடந்துகொண்டவர்களை ஏன் கைதுசெய்யவில்லை?

தாக்குதலில் ஈடுபட்டவேளை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இராணுவப் புலனாய்வாளரை பொலிஸார் ஏன் கைது செய்யாமல் அந்த இடத்திலேயே விடுவித்தார்கள்? எனவே, அரசின் மேலிடத்தில் இருந்து இந்த அராஜக நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகின்றது.

அதேவேளை, வடக்கில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து அங்கு அரச படைகளின் கீழ் காட்டாட்சி நடக்கின்றது என்பது புலனாகின்றது.

இதேவேளை, வடக்கில் கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது அளவெட்டியில் நடைபெற்ற கூட்டமைப்பின் முதலாவது கூட்டம் மீது இராணுவமே சீருடைகளுடன் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியது. அதேமாதிரி வடக்கு மாகாணசபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடைபெறும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், கிளிநொச்சியில் முதலாவதாக நடந்த கூட்டமைப்பின் மக்கள் சந்திப்புக் கூட்டத்தையும் குழப்பியடிக்கும் நோக்கில் அரசின் அனுமதியுடன் இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள், அரசின் அடிவருடிகள் அராஜகம் புரிந்துள்ளனர்.

இதிலிருந்து வடக்கு மாகாண சபைத் தேர்தல் அரச தரப்பின் வன்முறைகளுக்கு மத்தியில் நடைபெற சந்தர்ப்பம் உள்ளதை அமெரிக்கா, இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசின் அடாவடிகளைக் கண்டித்து அதற்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கா தனது இரண்டாவது தீர்மானத்தைக் கொண்டுவந்த சில தினங்களிலே கிளிநொச்சியில் தனது அராஜகத்தைக் காட்டியுள்ளது அரச தரப்பு. இதனூடாக ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன.

இராணுவ அடக்குமுறையின் உச்சக்கட்டமாக கிளிநொச்சியில் பொதுமக்கள் மீதும், கூட்டமைப்பின் அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அரசின் அனுமதியுடன் இராணுவம், பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த புலனாய்வாளர்களும், அரசின் அடிவருடிகளும் நடத்திய அராஜகம் மூலம் வடக்கில் காட்டாட்சி எந்தளவிற்கு உச்சமடைந்துள்ளது என்பதை சர்வதேச சமூகம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே, சர்வதேசம் இந்தச் சம்பவங்களுக்கு கண்டனங்களை மட்டும் வெளியிடாது இலங்கை அரசு மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவித்தார் சம்பந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கிளிநொச்சி நகரத் தாக்குதல் எதற்கான முன்னோட்டம்...?

மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.ஜனநாயக நாட்டில் அவர்களே மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கல் வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அவை, தம்மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் என்றும் அவை பெரும் அராஜகம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த மக்கள் கலந்துரையாடலின் போது,அரசாங்கப் படைகளின் துணையுடன் தம்மை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்; குற்றஞ்சாட்டுகின்றனர்.

தாக்குதலில் ஈடுபட்டவர்களில் சிலரை இனங்கண்டு, மக்கள் பொலிஸாரிடம் அவர்களைப் பிடித்துக் கொடுத்த போதிலும் சம்பந்தப்பட்டோர் விடுவிக்கப்பட்டனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

அலுவலகத்தில் பிரசன்னமாகி இருந்த மக்கள் மீதும், தம் மீதும்[நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும்] தொடர்ச்சியாக கல் வீசித் தாக்கத் தொடங்கியதுடன் கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர் என்றும் வெளிப்படுத்தி உள்ளனர்-நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தாக்குதல் தொடங்கிய இருபது நிமிடங்களின் பின்னர் அங்கு வந்த பொலிஸார் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தியவர்களைப் பாதுகாப்பாக கூட்டமைப்பு அலுவலகத்தை விட்டு வெளியேற்றினார்கள் என்பதும் பரகசியமாகிவிட்டது.

கூட்டமைப்பு அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு, அங்கு செல்வதற்குத் தாம் அனுமதி வழங்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்திருந்த போதிலும், பொலிஸ் நிலையத்தைத் தாண்டியே அவர்கள் அங்கு சென்றடைந்தனர் என்பது பகிரங்கமான ஒன்றாகும்.

அது மட்டுமன்றி, கல் வீச்சுக் குழுவினர் என்று பொதுமக்களால் இனங்காணப்பட்ட சிலரை, பொலிஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்த போதிலும் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி சனிக்கிழமைத் தாக்குதலில் - நகரப் பகுதித் தாக்குதலில் - சுமார் 15 பேர் படுகாயமுற்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - மக்கள் பிரதிநிதிகள்- மயிரிழையில் உயிர் தப்பினர். இவை, சனிக்கிழமை வன்செயல் சம்பவத்தின் நியாயப்படுத்த முடியாத, சாக்குப்போக்குக் கூறி மழுப்ப முடியாத விளைவுகள் என்பது ஊன்றிப் பதியப்பட வேண்டியவை.

குறிப்பிட்ட மக்கள் சந்திப்புக்கு,பொலிஸாரின் அனுமதி முறைப்படி பெறப்பட்டிருந்தது. சந்திப்பில் பங்குபற்றியவர்கள் போரினால் பாதிப்புற்றவர்கள்; வீடு வாசல்களை இழந்தவர்கள்; வாழ்வாதாரங்களை இழந்தவர்கள்; போரில் காயமுற்று அங்கவீனவர்களான பலரும் சந்திப்புக்குச் சென்றிருந்தனர்.

ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீதும், மக்கள் பிரதிநிதிகள் மீதும் தாக்குதல் நடத்தியவர்களின் அராஜகம் உள்நோக்கத்துடன் தூண்டப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதில் எள்ளளவிலும் சந்தேகம் இருக்கமுடியாது.

வன்செயல் சார்புடைய அராஜகத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பின்னால் நின்று இயக்கியவர்கள், தமது அரசியல் இலக்குகளை மையப்படுத்திச் செயற்பட்டார்கள் என்பதிலும், துப்புத்துலக்க வேண்டிய ஒன்றல்ல.

அரச சார்புடைய அமைப்பு ஒன்றினால் முடக்கி விடப்பட்டதே இந்த ஜனநாயக விரோத அராஜகம் என்பது எவருக்கும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகப் புலப்படும்.

வன்செயல்களால் மக்களை அடக்கி, அழுத்தி வைத்திருந்தால், உலக ஒப்பியாசாரத்துக்கு ஜனநாயகப் பிடிப்புடன் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகக் காட்டி தனது உள்ளார்ந்த உத்தேசத் திட்டத்தை நடைமுறையாக்குவதாகவே சனிக்கிழமை கிளிநொச்சித் தர்பார் தொட்டுக்காட்டுகிறது.

மற்றொரு புறமாக நோக்கின், இத்தகைய சம்பவங்களை திரைக்குப் பின்னால் நின்று இயக்கி, முடுக்கி வட மாகாண சபைக்கான தேர்தலை, மக்கள் பகற் கனவாகக் காண்பதற்கு வகுக்கும் உத்தியின் ஆரம்பமாகவும் இருக்கலாம்.

இது குறித்த நிலைப்பாடு என்ன என்று அரசு வெளிப்படுத்துமா.....?

## தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 01

அரசுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கும் சிறுபான்மை இன கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச தரப்பு சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து சிறுபான்மை மக்களின் பிரச்சினை சம்பந்தமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவா மாநாடு முடிவடைந்து விட்டது. இந்த மாநாட்டைத் திருவிழாவாகக் கருதிக் கொண்டு பல நாடகங்கள் அரங்கேறின.

ஜெனிவா மாநாட்டை வைத்துக் கொண்டு பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல் விளம்பரம் தேடிக் கொண்டனர். முடிவடைந்துபோன இந்த மாநாட்டின் மூலமாக தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் எனக் காட்டி இன்னும் சிலர் மேலும் அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஜெனிவாத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு முதல் படி என்று கூறுபவர்கள் இதனையே சென்ற ஆண்டும் தெரிவித்திருந்தனர்.

எகிப்து, லிபியா போன்று அரசுகளை வீழ்த்தி விடலாம் என்ற நோக்கில் கனவு காண்கிறார்கள். லிபியா, எகிப்து போன்ற நாடுகளில் மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்திருந்ததால்தான் அந்த நாட்டு அரசை வீழ்த்தக் கூடியதாக இருந்தது.

ஆனால் எமது நாட்டில் 70 வீதத்துக்கும் அதிகமான மக்கள் இன்று அரசுக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான பல சம்பவங்கள் இடம் பெறுகின்றன. முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களைப் போன்று இன்று தமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

இந்த நாட்டில் உள்ள எமது பிரச்சினைகளை வெளிநாட்டுத் தலையீடு இன்றி உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்வோமேயானால் அந்தத் தீர்வு நிரந்தரமானதாக இருக்கும்.

வெளிநாடுகள் மூலமாக நாட்டில் வாழும் 75 வீத சிங்கள மக்கள் மீது திணிக்கப்படும் எந்த ஒரு தீர்வும் நிலைத்து நிற்காது என்ற வரலாற்றை 13 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் நாம் உணர்ந்திருக்கின்றோம்.

உள்நாட்டில் தீர்வைக் காண்பதற்கு சிங்கள மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுள்ள இந்த அரசால் மட்டுமே முடியும் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்க் கட்சிகளின் அறிக்கை அரசியலை, அரசு ஒரு போதும் பொருட்படுத்துவதில்லை. அதனால் அரசுக்குள் இருக்கும் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சிறுபான்மை மக்களின் தீர்வுக்கான பேச்சுகளை ஆரம்பிப்போமேயானால் சாதகமான பயன்களை காண முடியும்.- என்றுள்ளது. (ம)

# பழமைக்கும் புதுமைக்கும் பொருந்துவது திருக்குறள்

## யாழ்.பல்கலை. தமிழ்த்துறைத் தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 01

இலக்கியப் படைப்புப் பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் பேசும் போது கடந்த கால முக்கியத்துவமும் நிகழ்கால அர்த்தமும் இருக்க வேண்டும்.

அந்த வகையில் முன்னைய பழமைக்கும், பின்னைய புதுமைக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக் கூடிய நூலாக திருக்குறள் விளங்குகிறது.யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.விசாகரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலத்துக்குக் காலம் பல அறிஞர்கள் உரைகளை எழுதியுள்ளனர். இதுவரையில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் உரைகளை எழுதியுள்ளனர். திருக்குறளின் கால அளவு பற்றி பேசுவதாயின் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 6 ஆம் நூற்றாண்டு காலப் பகுதிக்குள் தோன்றியிருக்கலாம் என்று பலரும் கருதுகின்றனர்.

திருவள்ளுவர் தனது நூலில் பெயர், இனம், மதம் பற்றி ஒன்றும் குறிப்பிட்டிருக்கவில்லை. இருந்தபோதும் இவை பற்றிய சர்ச்சைகள் எழுந்தன. வள்ளுவர் என்பது குடிப்பெயராக இருந்தது. சங்க காலத்தில் தெய்வப்புலவர் என்று இருந்தது. வள்ளுவர் எந்த சமயத்தவர் என்பது பார்க்க முடியாத அளவு மிக நுட்பமாக உள்ளது. சில குறள்களை வைத்து பார்க்கும் போது சமண சமயத்தவர் என்று ஊகித்துக்கொள்ள முடிகிறது.

பண்டைய உரை ஆசிரியர்கள் "முப்பால்" என்று பெயர் சூட்டி னார்கள்.அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்று அமைந்ததால் திருக்குறளை அவ்வாறே அழைத்தனர்.

திருக்குறளில்தான் முதன் முதலாக யாப்பு புதுமையை அறிமுகம் செய்தார். பின்னர் இந்த யாப்பு முறைமை எந்த இலக்கியத்திலும் வந்ததாகத் தெரியவில்லை.

திருக்குறளானது நல்ல விழுமியக் கருத்துக்களையும் வாழ்வை செம்மைப்படுத்தக் கூடிய வகையிலும் அமைந்துள்ளதால் பல மொழி பெயர்ப்பாளர்கள் தமது மொழியில் மொழி பெயர்த்துள்ளனர்.

இந்திய மாநில மொழிகளில் 13 மொழிகளிலும், ஆசிய மொழியில் 10 இலும், ஐரோப்பிய மொழியில் 14 இலும், ஆங்கில மொழியில் 40 இலும் மொழிபெயர்க்கப்பட்டு பன்னாட்டு மொழிகளில் திருக்குறளின் சிறப்பு பற்றி பேசியுள்ளனர். தற்போது தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் சீன மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.- என்றார். (ம-13)

# மருத்துவத்துறை சேவைகளுக்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப். 01

சுகாதாரத் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள மருத்துவ காரணங்களுக்காக நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் மற்றும் துணை மருத்துவ சேவைகளுக்கு சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் தகைமையுடையோரிடமிருந்து பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருத்துவக் காரணங்களுக்காக நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் சேவையில் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள், பௌதிகவியலாளர், தொழில் சார் சிகிச்சையாளர்,கதிரியலாளர் ஆகிய பதவிகளுக்கும், துணை மருத்துவ சேவையில் பொது சுகாதார பரிசோதகர்கள் , குடும்ப நல சேவையாளர்கள், மின்னியல் இதயத்துடிப்பு வரைவு பதிவாளர், பொது சுகாதார ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், பூச்சியியல் உதவியாளர், பாடசாலை பற்சிகிச்சையாளர் ஆகிய பதவிகளுக்கும் பயிற்சி பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர் ஊடாக ஏப்ரல் பத்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினரால் கோரப்பட்டுள்ளது. (ம-9)

# புளியங்குளம் நோக்கி தண்டவாளம் போடும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஏப்.01

வடக்கே ரயில் சேவையை ஆரம்பிக்கும் முன்னேற்பாடாக தற்போது ரயில் பாதைக்குரிய தண்டவாளம் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கி ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் வரைக்குமான பகுதிக்கு தண்டவாளங்கள் போடப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தண்டவாளங்கள் போடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக கிளிநொச்சி வரைக்குமான ரயில் பாதை சீர்படுத்தப்பட்டுள்ள நிலையில் தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் மாங்குளம், புளியங்குளம் போன்ற ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்வே ஊழியர்களுக்கான தங்குமிட விடுதி கட்டடங்களும் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.

அதனைவிட கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கும் புதிய கட்டடம் ஒன்று ரயில்வே திணைக்களத்தால் நிர்மாணிக்கப்படவுள்ளது. எதிர் வரும் ஓகஸ்ட் மாதத்தில் இந்தக் கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துவிடும்.

இந்த ஆண்டுக்குள் கிளிநொச்சி வரைக்கும் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு வசதியாக இதற்கான சகல நிர்மாணப் பணிகளையும் துரிதப்படுத்துமாறும் அரசு ரயில்வே திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தீடை' மீன்பிடித் தடையை தலைமன்னாரில் நீக்குங்கள்

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

மன்னார், ஏப்.1

தலைமன்னார் கடற்பரப்பில் புதிய தடைகள் போடப்பட்டுள்ள நிலையில் தீடை மின்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த மீனவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தத் தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சரிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரின் இந்தப் புதிய தடை உத்தரவால் நூற்றுக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் மீதான தடையை நீக்கி சுதந்திரமாக மீன்பிடிப்பில் ஈடுபட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரம்பரை பரம்பரையாகத் தலைமன்னார் கடற்பரப்பிலுள்ள இலங்கைக் கடல் எல்லைக்குட்பட்ட தீடைகளில், தலைமன்னார் கிராம மீனவர்கள் வள்ளங்களில் சென்று வலை வளைத்து மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர்.

கடந்த மூன்று தசாப்த கால போர் முன்னெடுப்புக்களால் இந்தப்பிரதேச மீனவர்கள் தமது வள்ளங்கள், இயந்திரங்கள், வலைகள் முதலான தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர். வாடிகள் எரியூட்டப்பட்டன. வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் இவர்கள் பல காலமாக வறுமையில் வாழ்ந்துள்ளனர்.

பல இன்னல்களுடனும், பொருள் இழப்புகளுடனும் சுமார் 500 இற்கும் அதிகமான மீனவர்கள் தற்போது குறிப்பாக தீடை மீன்பிடியில் ஈடுபட்டு வருமானமீட்டுகின்றனர்.

2009 மே மாதத்தின் பின்னர் தற்போது மீன்பிடி அனுமதி. அட்டை நடைமுறை நீக்கப்பட்டு கரையிலுள்ள கடற்படை அதிகாரிகளால் சுமுகமாக மீன்பிடிக்க இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் நடுக்கடலில் இந்திய-இலங்கை கடல் எல்லையில் ரோந்தியீடுபடும் இலங்கைக் கடற்படை அதிகாரிகளால் தடுக்கப்படுகின்றனர்.

தீடையில் மீன்பிடிக்க மறுக்கப்படும் இவர்களை ரோந்துக் கடற்படையினர் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லுமாறு பணிக்கின்றனர்.

இந்தப் புதிய நடைமுறையால் தமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் முறையிடுகின்றனர். அதிகப்படியான மீன் அறுவடையாகும் தீடைப் பகுதியில் மீன்பிடிக்கத் தடையில்லாமல் அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிப்பதோடு இந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் கேட்டுள்ளார்.

(ம-400)

# இயங்காத நிலையில் ஸ்கந்தபுரம் சந்தை



அக்கராயன், ஏப்.1

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 60 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தப் பொதுச் சந்தை கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சந்தைக் கட்டடம் தற்போது கால் நடைகளின் உறைவிடமாகவும், நெல்லைக் காயவிடும் இடமாகவும் மாறியுள்ளது.

இந்தச் சந்தை இயங்க வேண்டுமாயின் அதற்குப் பாதுகாப்பான வகையில் கதவுகள் அமைக்கப்பட வேண்டும், வேலிகள் அமைக்கப் பட வேண்டும் என சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் இன்று வரை எதுவுமே இடம்பெறவில்லை. இதனால் சந்தை இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது. பல லட்சம் ரூபா செலவில் மிகவும் பின்தங்கிய பகுதி ஒன்றில் அமைக்கப் பட்ட இந்தப் பொதுச் சந்தை பயனற்ற வகையில் காணப்படுகின்றமை தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(க-18)

# காணிப் பத்திரங்கள் இல்லாததால் 'சஞ்சீவிக்காடு' மக்கள் அவலம்

நெடுங்கேணி, ஏப்.1

வவுனியா வடக்கு புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள பிள்ளையார் வீதி (சஞ்சீவிக்காடு) கிராம மக்கள் காணிப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் பல்வேறு அல்லல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அவர்கள் சுமார் 20 ஆண்டுகளாக இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்றனர். வீடுகள், கிணறுகள், பயன்தரும் மரங்கள் என்பனவும் இவர்களது வதிவிடங்களில் உள்ளன.

ஆனால் இதுவரை காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் இவர்களுக்கு எந்தவிதமான அபிவிருத்திக்கான உதவிகளும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

**சுமார் 32 குடும்பங்கள் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இங்கு மீள்குடிய மர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

இவர்கள் மீள்குடியமர்ந்த ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நிதியுதவிகளைத் தவிர வேறெந்த உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை யென இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அரச அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளும் வேளையில் காணி தொடர்பான பிரச்சினையென அவர்கள் தட்டிக் கழிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவர்கள் வசிக்கின்ற காணிகள் அரச காணியெனக் காரணம் கூறப்பட்டு அபிவிருத்தி வேலைகள் முடக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது. சுமார் 32 குடும்பங்கள் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இங்கு மீள்குடியமர்த்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் உரிய அதிகாரிகள் தமது அவல நிலையை உணர்ந்து உதவ வேண்டுமென இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-435)

# செயலிழந்து போனது ஏற்று நீர்ப்பாசனம்

அக்கராயன், ஏப்.1

ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப் பாசனத் திட்டம் செயலிழந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இந்த நீர்ப்பாசனத் திட்டம் செயலிழந்து காணப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் போது ஏற்று நீர்ப்பாசனத்துக்குத் தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கு எரிபொருளை மானிய விலையில் வழங்க வேண்டும். இதனைச் செயற்படுத்துவதற்கு இரண்டு ஊழியர்களை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப் பட்டது.

ஆனால் இவை இரண்டும் நிறைவேற்றப்படாத நிலையே காணப்படுகின்றது. இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதால் சுமார் 183 விவ சாயிகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)


# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் பிரியதர்ஷன்

(Merchant Credit of SriLanka Ltd)



நீர்வேலி மேற்கு, கரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பிரியதர்ஷன் நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மக்கள் வங்கி )- காலஞ்சென்ற தனலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் புதல்வனும், றஜித்தாவின் (கனடா) அன்புச்சகோதரனும், சாந்தகுமாரின்(கனடா) அன்பு மைத்துனரும் கஜாளினி (கனடா), சாருஜன் (கனடா), மிஷாளினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
கரந்தன்.

(35536)(8.6.7)

தகவல்:
க.சிவப்பிரகாசம் (தந்தை)
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,
மக்கள் வங்கி ).



# கண்ணீர் அஞ்சலி



## சிவப்பிரகாசம் பிரியதர்ஷன்

பூத்துக் குலுங்கிய மலரொன்று
பொசுங்கிப் போன நிலா இன்று
காலன்வந்து உடன் தனை
கவர்ந்து சென்றது ஏனோ?
உன் பிரிவால் துயருறும் உற்றவர்க்கு
இறைவன் நிறைவாய் ஆறுதல் அளித்திடவும்
நின் ஆன்மா இறைவனில் அமைதி அடையவும்
நிறைவாய் இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

MCSL Financial Services Limited
(Owned by Bank of Ceylon and M... ...PLC)
Co.Reg. No. PB 61

(35539) (6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி ஒழுங்குகள் குறித்து மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.1

நெடுந்தீவில் மகா வித்தியாலய மாணவர்களுக்கு வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தரங்கு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தின் வாகனப் போக்குவரத்துப் பிரிவால் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

வித்தியாலய அதிபர் திருமதி சாந்தா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் நெடுந்தீவு பொலிஸ் நிலைய வாகனப் போக்குவரத்துப் பிரிவுக்கான சார்ஜன்ட் இரட்ணயக்க, நந்தசூரியா ஆகியோர் கருத்துரை, செயல்முறையூடாக மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்துக்கான ஒழுங்கு விதிகளைத் தெளிவுபடுத்தினர். (ம-7)

## வடக்கு பாடசாலைகள், வலயங்களுக்கு தனிச் சிங்களத்தில் வந்தது சுற்றறிக்கை

### இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.01

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகள், வலயக் கல்வி அலுவலகங்களுக்கு கல்வி அமைச்சால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை தனிச் சிங்களத்தில் உள்ளது. இதனால் அதனைப் புரிந்து கொள்ள முடியாது அதிகாரிகள் சிரமம் இடைந்து வருகின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

உயர்தர வகுப்பு பாடவிதானத்தில் திருத்தியமைக்கப்பட்டதன்படி உயிரியல், இரசாயனவியல் பிரிவுகளில் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. மேலும் சில பகுதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகள் மற்றும் அது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் அனைத்தும் தனிச் சிங்கள மொழியிலேயே சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை விளங்கிக் கொள்வதிலேயே சிக்கலை அதிகாரிகள் எதிர்கொண்டனர்.

பின்னர் அந்தச் சுற்றறிக்கையைத் தமிழ் மொழி பெயர்ப்புச் செய்து இலங்கை ஆசிரியர்சங்கம் வழங்கியுள்ளது.

தமிழ் மொழி நடைமுறைகள் தொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துவரும் நிலையிலும் தனிச் சிங்கள சுற்றறிக்கை வடக்குக்கு அனுப்பப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜெயரத்ன ஒப்பமிட்டே இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

குடிதண்ணீர் விநியோகப் பணிக்கு

## குழிவெட்டி இரண்டு வருடங்கள்; பணிகள் ஆரம்பிக்காமல் கிடப்பில்

யாழ்ப்பாணம், ஏப்.01

அனலைதீவு கிழக்கு வைரவர் கோயில் பகுதியில் தண்ணீர் விநியோகக் குழாய் பொருத்துவதற்காக வீதியோரம் மூன்று அடி ஆழத்தில் குழி வெட்டப்பட்ட போதும் இதுவரை வேலைகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாகக் குறித்த குழி வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குழி மூடப்படாத நிலையில் நீண்ட காலம் இருப்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

குறித்த இடத்தில் வெட்டப்பட்ட குழியை மூட சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தப் பகுதியில் சுமார் ஐம்பது குடும்பங்களுக்கு மேல் குடியிருந்து வருகின்ற போதும் தண்ணீர், மின்சார வசதிகள் ஏற்படுத்தித் தரவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-7)

# தமிழர் என்ற இனத்தை இல்லாமல் செய்ய அரசு இராணுவத்தைப் பயன்படுத்துகிறது

### தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வில் மாவை சேனாதிராஜா தெரிவிப்பு





யாழ்ப்பாணம், ஏப். 01

ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்த அரசு தமிழினத்தையே முற்றாக அழிக்க வேண்டும் என்ற முனைப்புடன் இராணுவத்தைப் பயன்படுத்துகிறது.

எந்த நிலம் எமக்குரியதோ அந்த நிலத்தை அபகரித்து தமிழர் என்ற இனமே இல்லாமல் செய்ய இராணுவத்தைப் பயன்படுத்துகிறது. எங்களது மண்ணில் வாழ்வோம், எங்களது ஆட்சியை நிலை நிறுத்துவோம் என்ற உறுதியுடன் தந்தை செல்வாவின் இலட்சியத்தை அவருக்குப் பிடித்தவாறு நிறைவேற்றுவோம்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இவ்வாறு குறிப்பிட்டார். தந்தை செல்வாவின் 115 ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் எமது உரிமைக்காக அஹிம்சை அறவழியில் குரல் கொடுத்தாலும் அரசு இராணுவத்தின் மூலம் அடக்குகிறது. மக்கள் தமது அன்றாட வேலைகளைக் கூட செய்ய முடியாது இடர் விளைகிறது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது கடமைகளைச் செய்ய முடியாதவாறு இராணுவத்தைக் கொண்டு அரசு தடுக்கிறது.

கிளிநொச்சியில் எமது உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் மீது கல் வீசித் தாக்கியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் வீட்டைச் சேதப்படுத்தியுள்ளனர். நாங்கள் கல்வீச்சில் இருந்து தப்பிக் கொண்டோம். ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொண்டு வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை நடத்துகின்றது அரசு.

தந்தை செல்வா எமது இனத்தின் விடிவுக்காக தமிழர்கள் வாழ வேண்டும் என்பதற்காக தமிழ் மண்ணில் தமிழர்கள் ஆட்சியை நிலைநாட்ட உறுதி பூண்டிருந்தார்.

தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நாம் எமது மண்ணை, ஆட்சியை நிலைநிறுத்துவோம் என உறுதி கொள்வோம்.- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், செல்வா அறங்காவல் சபைத் தலைவர் எஸ். ஜெபநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சூ. சிறில், தமிழரசுக் கட்சியின் செயலாளர் சி.வி.கே. சிவஞானம், யாழ். மாநகர சபை உறுப்பினர் இ. இராஜதேவன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ந. ஐங்கரன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார், உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-7)

## நாள் ஒன்றுக்கு 4,000 லீற்றர் பசுப்பால் 'யாழ் கோ' வால் விற்பனை

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் தினமும் நான்காயிரம் லீற்றர் வரையான பசுப்பாலை விற்பனை செய்து வருகின்றது.

'யாழ்கோ'வின் 28 கிளை நிலையங்கள் ஊடாக இந்தப் பசுப்பால் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்போரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுவரும் இந்தப் பசுப்பால் நுகர்வோருக்கு லீற்றர் 60 ரூபா விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக ஆலய திருவிழாக்கள் மற்றும் விரத காலங்களில் இந்தப் பசுப்பாலின் தேவையும் அதிகரித்துக் காணப்படுவதாக 'யாழ்கோ' வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சமயங்களில் பசுப்பால் கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டும் வருகின்றது என்றும் கூறப்பட்டது. (ம-17)

மட்டுவில் கண்ணகை அம்பாள் ஆலயத்தில்

## சாரணர் குழு, சென்.ஜோன்ஸ் பிரிவு சேவையில் இல்லாதது குறித்து விசனம்

தென்மராட்சி, ஏப். 01

பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பங்குனித் திங்கள் பொங்கலில் தென்மராட்சி பிரதேச பாடசாலைகளின் சாரணர் குழுக்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் ஆகியோர் சேவையில் ஈடுபடுத்தப்படாதது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

ஆலய பொங்கலில் குடாநாட்டில் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான அடியார்கள் வருகை தருவது வழமை.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய இந்து ஆலயங்களில் திருவிழா வேளைகளில் அந்தப் பகுதியைச் சேர்ந்த அனைத்து பாடசாலைகளின் சாரணர் குழுக்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரும் கலந்து கொள்வது வழமை.

ஆனால் தென்மராட்சி பிரதேசத்தில் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் சாரணர் குழுக்கள் உள்ள போதிலும் இந்த ஆலய பொங்கலில் பங்குபற்றாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## 'டிம் லைற்' போடாமையால் மதிலுடன் மோதிய ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஏப். 01

இரவு நேரம் எதிரே வந்த வாகனம் முன்பக்க லைற்றைத் தாழ்த்தாது ('டிம்' போடாது) வந்ததால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியர் நிலை தடுமாறி மதிலுடன் மோதுண்டு படுகாயமடைந்தார்.

சம்பவ இடத்திலேயே மயங்கிய நிலையில் காணப்பட்ட அவரை ரோந்து சென்ற பொலிஸார் மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இந்தச் சம்பவம் உரும்பிராயில் அண்மையில் இடம்பெற்றது. சம்பவத்தில் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த ந.ஸ்ரீதரன் (வயது-33) என்ற ஆசிரியரே படுகாயமடைந்தவராவார்.

எதிரே வந்த வாகனம் 'டிம்' போடாமல் வந்ததால் பாதையைக் கவனிக்க முடியாத நிலையில் மதிலுடன் மோதுண்டதாக அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் இரவில் மோட்டார் சைக்கிள், வாகனங்களில் பயணிப்பவர்கள் 'டிம்' போடாது செல்வதால் இதுபோன்ற அசம்பாவிதங்கள் ஏற்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது என்று பலர் கருத்துத் தெரிவித்தனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 வருட பழைமையான ஆலயம் இடிந்தகரையில் இடிந்து தகர்ந்தது



திருநெல்வேலி, ஏப்.1
திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரையில் ஏற்பட்ட தொடர் கடல் அரிப்பால் 100 ஆண்டு பழைமையான சிற்றாலயம் நேற்று முன்தினம் இடிந்து கடலுக்குள் விழுந்தது.

இடிந்தகரை கிராமத்தில் உள்ள கடற்கரையில் புனித ஆரோக்கியநாதர் சிற்றாலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் பொதுமக்கள் தினமும் சென்று வழிபட்டு வந்தனர். ஆலயம் இருந்த பகுதியில் தொடர்ச்சியாக கடல் அரிப்பு ஏற்பட்டு வந்தது.

இந்தநிலையில் ஆல யத்தில் இருந்த புனித ஆரோக்கியநாதர் சொரூபம் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு பிரதான தேவாலயத்தில் வைக்கப்பட்டது. அதையடுத்து, கடந்த ஒரு மாதமாக பொது மக்கள் சிற்றாலயத்துக்குச் செல்லவில்லை.

அதற்கிடையே கடல் அரிப்பு அதிகமானதால் சிற்றாலயம் இடிந்து கடலுக்குள் விழுந்தது. (வ)

# தனிமைப்பட்டுவிட்டது காங்.

## ஈழத் தமிழர் விவகாரத்தில் என்கிறார் நெடுமாறன்



மாணவர்கள் போராட்டம் ஏற்படுத்திய நிர்ப்பந்தமே தி.மு.கவை மத்திய அரசிலிருந்து விலக வைத்துள்ளது.

மதுரை, ஏப்.1
ஈழத்தமிழர் பிரச்சினையில் மக்களிடமிருந்து காங்கிரஸ் தனிமைப்பட்டு விட்டது என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனி ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சட்ட சபையில் முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றிய தீர்மானம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. ஆனால், டெசோ மாநாட்டு தீர்மானமே சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கருணாநிதி கூறுவது சரியானதல்ல. தீர்மானம் நிறைவேறும் போது தி.மு.க. உறுப்பினர்கள் சட்ட சபைக்குள் இருந்தும் வாக்களிக்கவில்லை.

வாக்களிக்க வேண்டிய இக்கட்டான நிலையைத் தவிர்க்கவே திமுக வெளிநடப்புச் செய்துள்ளது. இதன் மூலம் தி.மு.க. ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்துள்ளது. மாணவர்கள் போராட்டம் ஏற்படுத்திய நிர்ப்பந் தமே தி.மு.கவை மத்திய அரசிலிருந்து விலக வைத்துள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தமிழகத்தைத் தவிர வேறு மாநிலங்களில் ஆதரவில்லை என்கிறார். பலஸ்தீனத்துக்கு மத்திய அரசு ஆதரவளித்தது. கிழக்கு பங்களாதேஷ் உருவாக ஆதரவளித்தது. இவற்றுக்கு ஏனைய மாநிலங்களுடன் ஆலோசித்த பின்னரா மத்திய அரசு முடிவெடுத்தது. எனவே வர லாறு தெரியாமல் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசுகிறார்.

இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் இலங்கையில் உள்ள பெரும்பாலான சிங்களவர் இந்திய வம்சாவளியினர் என்கிறார். அவ்வாறெனில் அவர்களுக்குத் தனிநாடு எதற்கு? மேலும், சீனப் போரின்போது இந்தியாவுக்கு ஆதரவு தெரிவிக்காத இலங்கை, கிழக்கு பங்களாதேஷ் விடுதலைப் போரின்போது பாகிஸ்தான் இராணுவ விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பிடவும் அனுமதித்தது சரியா?

மத்திய அரசுக்கான ஆதரவை தி.மு.க., திரிணமூல் கட்சிகள் விலக்கிக் கொண்டுள்ளன. சரத்பவாரும் விலகப் போவதாகக் கூறிவருகிறார். எனவே மத்திய அரசு பதவியில் நீடிக்க தார்மீக உரிமையில்லை. ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் தானாகவே மக்களிடமிருந்து தனி மைப்பட்டுவிட்டது. மாண வர்கள் போராட்டம் யாராலும் தூண்டப்படவில்லை. மக்கள வையில் எதிர்க்கட்சிகள் ஈழத்தமிழருக்கு ஆதரவாகவே குரல் கொடுக்கின்றன. மாண வர்கள் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய மத்திய உளவுத்துறையும், காங்கிரஸும் முயற்சிப்பது வெற்றிபெறாது-என்றார்.(வ)

## அமெ.குழுவுக்கு மோடி லஞ்சம்;காங்.குற்றச்சாட்டு

குஜராத்துக்குப் பய ணம் மேற்கொண்ட அமெ ரிக்க நாடாளுமன்றக் குழு வுக்கு முதல்வர் நரேந்திர மோடி லஞ்சம் கொடுத்துள்ளார். அதனால்தான் அவர்கள் மோடியின் நிர்வாகத் திறமையை பாராட்டியிருக்கின்றனர் என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் 18 பேர் கொண்ட குழு, கடந்த வியாழக்கிழமை குஜராத்துக்கு பயணம் மேற்கொண்டது. அங்கு முதல்வர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேசியது. அப்போது அவருடைய நிர்வாகத் திறமையை அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினர். (வ)

## மீனவர் வேலை நிறுத்தம் வாபஸ்

இலங்கையில் 19 மீனவர்களை விடுவிக்க கோரி ராமேஸ்வரம் மீனவரின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. கடந்த 13 ஆம் திகதி 19 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் விடு தலை செய்யக் கோரி மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் இது தொடர்பான பேச்சு ஆட்சியர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. பேச்சில் சுமுக முடிவு எட்டப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. (வ-13)

## மரண அறிவித்தல்

### திருமதி சுகந்தினி விஜயகுமார்



வேலணையைப் பிறப்பிடமாகவும், இராணிமில் ஒழுங்கை, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தினி விஜயகுமார் கடந்த (29.03.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் மங்களராணி தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயகுமாரின் பாசமிகு மனைவியும், தமிழினி, தனுஷிகா, தனுசன் ஆகியோரின் அன்புத் தாயும், கமலக்கண்ணன், விமலக்கண்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராணி மில் ஒழுங்கை,
நெல்லியடி.
(35314)(10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
24.06.1977

போரின் பிடியில்
01.04.2009

செல்வி
### வசந்தமாலா சுப்பிரமணியம்
(B.A. பட்டதாரி)

திதி: பூர்வ பட்ச அட்டமி

*இன்று ஆண்டுகள் நான்கு ஆனாலும்*
*நீ எங்களை விட்டுப் பிரிந்தது போல் தோன்றவில்லையே...*
*நித்தம் எங்கள் நெஞ்சினிலே நிழலாக*
*நீ பதிந்து விட்டாய்.... எங்கே எங்களை விட்டு*
*நீ சென்றாய் சொல்! உன் கனவுகளுடன் நாங்கள்*
*ஒன்றித்து உருகித் தவிக்கின்றோம்*
*எங்கள் வசந்த மகளே...என்றும் உன் நினைவுகளுடன்*

சங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(C/9237)(8.7.II)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா இளையதம்பி



தோப்பு, அச்சுவேலியைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட திருமதி நாகம்மா இளையதம்பி 28.03.2013 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை செட்டியார் - சேதுப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, காசிப்பிள்ளை, தங்கம்மா, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், சந்திரசேகரி (கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற நடராஜா மற்றும் தங்கராஜா (வீட்டு விற்பனை முகவர் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், லீலாவதி (கனடா), சாந்தநாயகி (ஜேர்மனி), கனகசுந்தரம்பிள்ளை, சோபனா (ஆசிரியர் - ஹற்றன்), அகிலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சூரியகுமார்(கனடா)- பாமினி (ஆய்வுகூட உதவியாளர் - கரவெட்டி விக்கினேஸ் வராக்கல்லூரி), சசிலேகா (ஆசிரியர், யா/ தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்)- ஜெயராசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - மேக்கன்ரைல்ஸ்), சதீஸ்குமார்- ஜெனந்தினி, ரஜீவ்குமார் (C.T.B. பொறியிய லாளர் பிரிவு, பருத்தித்துறை), சஜீஜா, கிருஷ்ண வேணி - பரணீதரன் (கனடா), திருவேணி - ஸ்ரீரஞ்சன் (கனடா), பத்மவேணி - கருணதாஸ் (கனடா), நமணன் (ஜேர்மனி), கீர்த்திகா (கனடா), தணிகன் (கனடா), சிந்துஜா (மாணவி - ஹற்றன்), ராகவி (மாணவி - ஹற்றன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சந்தோஷ், யஸ்மிதா, அனுஷ்கா, சஜீவன் (கனடா), ஹரிசா, (கனடா), தனிகன் (கனடா), ஹபிசா (கனடா), தசோபிகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு,
அச்சுவேலி.
(35538) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே. 077 5579 477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ப் பிரகடனம்

## கொரிய தீபகற்பத்தில் பதற்றம்



பியாங்யாங், ஏப்.1

தென்கொரியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் வடகொரியா போர் பிரகடனம் செய்தது. முப்படைத் தளபதிகளுடன் நடைபெற்ற முக்கிய ஆலோசனையின் பின்னர் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். அதையடுத்து இருநாடுகளுக்கும் இடையே உள்ள அனைத்து உறவுகளும் துண்டிக்கப்பட்டன.

வடகொரியாவில் போர்ப் பிரகடனத்தை அடுத்து கொரிய தீபகற்பத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இருநாட்டு முப்படைகளும் போருக்குத் தயார் நிலையில் காணப்படுகின்றன.

இதுகுறித்து வடகொரிய இராணுவம் குறிப்பிடுகையில்-

தென்கொரியாவுக்கு எதிராக வடகொரியா போர்ப் பிரகடனம் செய்கின்றது. இருநாடுகளுக்கும் இடையிலான அனைத்து உறவுகளும் முடிவுக்கு வந்துவிட்டன. அச்சுறுத்துவது மூலம் எம்மைப் பணிய வைக்க முடியாது. இனி அனைத்தும் போரின் மூலமே தீர்க்கப்படும். சிறு அசம்பாவிதங்களும் அணு ஆயுதப் போராகவே மாற்றமுறும். அதில் நாம் தெளிவாகவே இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே ஏற்கனவே 1950ஆம் முதல் 1953ஆம் வரை போர் நடைபெற்றது. அப்போது தென்கொரியாவுக்கு அமெரிக்காவும், வட கொரியாவுக்கு சீனா, ரஷ்யா நாடுகளும் ஆதரவாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## “நாட்டை விட்டு வெளியேறக் கூடாது முஷாரப்” – நீதிமன்றம்



இஸ்லாமாபாத், ஏப்.1

நீதிமன்ற அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முஷாரப்புக்கு எதிராகப் பல்வேறு வழக்குள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. அதையடுத்து முஷாரப் முன்பிணை பெற்றே நாடு திரும்பியிருந்தார். இந்த நிலையில் பிணைக் காலத்தை அதிகரிக்குமாறு நீதிமன்றத்தில் கோரியிருந்ததார். விசாரணைகளின் பின்னர் பிணைக் காலத்தை அதிகரித்த நீதிபதி, அனுமதி இன்றி முஷாரப் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று உத்தரவிட்டார்.

நீதிமன்றம் சென்றமை குறித்து கருத்துத் தெரிவித்த முஷாரப்,

''எனது வாழ்க்கையில் நீதிமன்றத்துக்குள் நுழைந்தது இதுவே முதல் தடவை. நீதிபதி வரும் போது எழுந்து நிற்க வேண்டும் என்ற விதியை பின்பற்றியபோது, அவமானமாக உணர்ந்தேன். ஆனால் சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதை நினைத்துக் கொண்டேன்''- என்று தெரிவித்துள்ளார். (ற)

## எதிர்க் கட்சியினர் ஹிட்லரின் வாரிசுகள்

### வெனிசுவேலா துணை ஜனாதிபதி

கராக்கஸ், ஏப்.1

வெனிசுவேலா எதிர்கட்சியை ஹிட்லரின் வாரிசுகள் என அந்த நாட்டின் துணை ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வர்ணித்துள்ளார்.

நாட்டிலுள்ள கியூபா வைத்தியர்களை துன்புறுத்தும் வகையில் எதிர்கட்சிகள் செயற்படுவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குடிசை மற்றும் கிராமங்களில் இலவச சுகாதார சேவைகளை வழங்குவதற்காக கியூபா வைத்தியர்களை அழைத்து வரும் நடவடிக்கையை சாவேஸ் 10 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தார்.

அத்துடன் தனது 14 ஆண்டுகால ஆட்சிக்காலத்தில் கம்யூனிஸ்ட் அரசாங்கமான கியூபாவுடன் நெருக்கிய உறவுகளை பேணி வந்திருந்தார்.

எனினும் மதுரோ மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் கியூபா ஜனாதிபதியிடம் இருந்து நேரடி வழிகாட்டல்களை பெறுவதாக எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெனிசுவேலாவை கம்யூனிஸ நாடாக மாற்றுவதற்கு சில கியூபா வைத்தியர்கள் முனைவதாகவும் எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.(ற)


## திபெத் சுரங்கத்தில் நிலச்சரிவு: 83 பேர் சாவு


லாசா, ஏப்.1

திபெத்தில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 83 தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதையுண்டனர்.

திபெத் பிராந்தியத்தின் நிர்வாக நகரமான லாசாவின் மலைப்பகுதியில் அமைந்துள்ள தங்கச் சுரங்கத்திலேயே நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கு உறங்கிக் கொண்டிருந்த 83 தொழிலாளர்கள் உயிரோடு புதைந்தனர்.

உயிரிழந்தவர்களில் இருவர் திபெத்தியர்கள் என்று அரசு அறிவித்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். விபத்து இடம்பெற்ற பகுதி கடும் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் மீட்புப் பணிகள் தாமதமடைந்து வருகின்றது என்று கூறப்படுகிறது. (ற)





வத்திக்கானில் ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. புதிய பாப்பரசராகப் பொறுப்பேற்றுள்ள முதலாவது பிரான்சிஸ் தலைமையில் நடந்த முதல் ஈஸ்டர் திருநாள் பிரார்த்தனையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சீன சுரங்கத்தில் நச்சுவாயுக் கசிவு; 28 பேர் சாவு

பீஜிங், ஏப்.1

சீனாவில் ஏற்பட்ட நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவால் 28 பேர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

ஜிலின் மாகணத்தில் உள்ள பேபோ நிலக்கரி சுரங்கத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. திடீரென சுரங்கத்தினுள் நச்சுவாயுக் கசிவு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. விபத்து ஏற்படும்போது சுரங்கத்தினுள் 41 பேர் பணியில் இருந்தனர். அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனின்றி 28 பேர் உயிரிழந்தனர். (ற)

## ஜோர்தானில் புதிய அரசு

அமான், ஏப்.1

ஜோர்தானில் மன்னர் அப்துல்லா என்சோர் தலைமையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களில் உருவாக்கப்பட்டுள்ள மிகவும் சிறிய அரசாக இது அமைந்துள்ளது.

அமைச்சரவையை அமைப்பது குறித்து முதல் முறையாக நாடாளுமன்றத்துடன் கலந்து ஆலோசித்து மன்னர் இந்த முடிவை எடுப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசு வசந்த புரட்சியை அடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களின் பிரகாரம் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சர்களின் செலவுகளை குறைப்பதற்கு மன்னர் பல்வேறு நடவடிக்கைகளும் எடுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.(ற)

## நேட்டோவின் தாக்குதலில் குழந்தை உட்பட 10 பேர் சாவு

கசாணி, ஏப்.1

ஆப்கனின் கசாணி மாகாணத்தில் நேட்டோ படைகள் நடத்திய வான் தாக்குதலில் குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், ஆப்கன் படைகளுக்கு ஆதரவாக நடத்தப்பட்டது என்று நேட்டோ தெரிவித்துள்ளது. ஆனால் ஆப்கன் ஜனாதிபதியின் உத்தரவை மீறியே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் எல்லையில் உள்ள ஆப்கன் மலைப் பகுதிகளில் தலிபான்கள் பதுங்கி



இருப்பதாக சந்தேகப்படுவதால், நேட்டோ படைகள் அந்தப் பகுதிகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அங்கு நேட்டோ படைகள் நடத்தும் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்பது தொடர்பில் ஆப்கன் மற்றும் அமெரிக்கா இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சர்ச்சைக்குரிய தீவுப் பிரதேசத்துக்கு போர்க் கப்பலை அனுப்பியது தைவான்

தைபே, ஏப்.1

கிழக்கு சீனக் கடலில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய தீவுப் பகுதியில் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள தனது போர்க் கப்பலை அனுப்பியுள்ளது தைவான்.

குறிப்பிட்ட தீவுக்கு ஏற்கனவே சீனாவும், ஜப்பானும் உரிமை கொண்டாடி வருகின்றன. அந்த தீவை சீனா டியாவோயூ என்றும், ஜப்பான் சென்காகு என்றும் அழைத்து வருகின்றன.

தைவான் தங்கள் நாட்டின் ஒரு பகுதி என சீனா பல ஆண்டுகளாகக் கூறிவரும் நிலையில், தற்போது குறிப்பிட்ட அந்த தீவு தங்களுடையது என்று தைவானும் உரிமை கோருகிறது.



போர்க்கப்பலை அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியில் கடலோர காவல் படை அதிகாரியிடம் கொடியை ஒப்படைக்கும் தைவான் அதிபர் மா யிங்-ஜியோவ்.

இந்தநிலையில், அந்த தீவுப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக தைவான் ஜனாதிபதி மா யிங்-ஜியோமா கடந்த சனிக்கிழமை போர்க் கப்பலை அனுப்பி வைத்தார்.

சுமார் 2 ஆயிரம் தொன் எடை கொண்ட அந்த போர்க் கப்பலில், இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள் போன்ற ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே தெற்கு கயோசியுங் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தைவானின் சிறிய கப்பல்களுடன் இந்தக் கப்பல் விரைவில் இணைந்து கொள்ளும். அவற்றுடன் சேர்ந்து இந்தக் கப்பல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினபுரியில் ஒருவர் படுகொலை

கொழும்பு,ஏப்.1

இரத்தினபுரி, அங்கம்மன பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்டவர் சந்தேகநபரின் மகளை சந்திப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

## தினமும் மூன்று கோடி ரூபா போதைப்பொருள் விற்பனை

கொழும்பு,ஏப்.1

நாட்டில் தினமும் மூன்று கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள் விற்பனை செய்யப்படுகிறது என்று உயர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் தினமும் சுமார் ஐந்து கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் பாவிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் ஒரு கிலோ ஹெரோயின் போதைப் பொருளின் சந்தைப் பெறுமதி 45 லட்சம் முதல் 60 லட்ச ரூபா என்று கூறப்படுகிறது.

தினமும் ஹெரோயின் போதைப் பொருளை 50,000 பேர் பயன்படுத்தி வருகின்றனர். வருடாந்தம் சுமார் ஆயிரத்து நூறு கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் பயன்பாட்டில் உள்ளது என்றும் இதற்காக வருடாந்தம் 821 கோடி ரூபா முதல் 1095 கோடி ரூபா வரையில் செல விடப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தேடுதல்களை நடத்திய போதிலும் வருடாந்தம் 100 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருளைக் கூட மீட்க முடிவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. இராசேந்திரம் புவன்ராஜ்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் - I)



முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தலைமைக் காரியாலய பரிசோதகராகக் கடமையாற்றி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் - I இக்கு பதவி உயர்வு பெற்று யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றமாகிச் செல்லும் இ.புவன்ராஜ் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ப.நெ.வ.அ.கூ.சங்கம்,
பாண்டியன் குளம், துணுக்காய்,
வவுனிக்குளம். (35623) (6.7)

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.


# பொது பல சேனாவை தடை செய்க

## ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு கோரிக்கை

கொழும்பு,ஏப்.1

பொது பல சேனா அமைப்பை உடனடியாக தடை செய்து நாட்டில் சட்டத்தையும், சமூக நீதியையும் நிலைநிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரிட்டனில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் சர்வாதிகாரக் காட்டாட்சிக்கு முயற்சித்து வருகின்ற பொது பல சேனாவின் செயற்பாடுகளை தடை செய்ய வேண்டும்.

**இலங்கையில் சர்வாதிகாரக் காட்டாட்சிக்கு முயற்சித்து வருகின்ற பொது பல சேனாவின் செயற்பாடுகளை தடை செய்ய வேண்டும்.**

இலங்கையில் அனுராதபுரம் சியாரம் உடைக்கப்பட்ட மத வன்முறையுடன் மூன்றாவது பயங்கரவாத சக்தியாக பொது பல சேனா அமைப்பு உருவாகி இறுதியாக கடந்த வியாழக் கிழமை கொழும்பு, புறநகர் பிரதேசத்தில் அமைந்திருந்த முஸ்லிம்களின் வியாபார நிலையத்தை தாக்கியுள்ளது.

நாட்டின் சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம் போன்றவற்றை மதிக்காது சீருடை அணியாத பொலிஸ் காரர்களாகச் செயற்பட்டு வருகிறது பொது பல சேனா.

இந்த அமைப்பின் அச்சுறுத்தல் சிறுபான்மைச் சமூகங்களுக்கு மாத்திரமன்றி, சிங்கள-பௌத்த மக்களுக்கு மத்தியிலும் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பொது பல சேனா அமைப்பின் இனவாத, மதவாதச் செயற்பாடுகளின் விளைவாக நாமும் பல்வேறு தரப்பினரின் விமர்சனங்களுக்கும், அழுத்தங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம்.

அதனால் அரசுக்கு ஆதரவாகத் தொடர்ந்தும் செயற்பட முடியாத அளவுக்கு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளோம்.

எனவே பொது பல சேனா அமைப்பு மேற்கொள்ளுகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளுக்கு அமைதிப் போக்கில் அங்கீகாரம் வழங்கிக் கொண்டிருக்காது, நாட்டின் சட்டத்துக்கு அமைவாக தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

பொது பல சேனாவின் நடவடிக்கைகளையும் பயங்கரவாதச் செயற்பாடுகளாகக் கருதி அந்த அமைப்பபை தடை செய்து, அனைத்து மக்களும் நாட்டில் அச்சம், பீதியற்ற வகையில் தமது அன்றாட வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசு வழிகோல வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


# ஏலவிற்பனை அறிவித்தல்

சங்கத்தின் பின்வரும் அசையும் சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

01. கழற்றிய உடற்கோப்பு (பழையது இசூசு லொறி)
02. இரண்டு சில்லு உழவு இயந்திரப்பெட்டி (ரயர்களுடன்)
03. நீர் இறைக்கும் டீசல் இயந்திரம் (4" ஹொரின்)
04. டீசல் இயந்திரம் (மின்பிறப்பாக்கி 7.5 W)

இடம் : வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ. சங்கத்தின் நீர்வேலி வடக்கு கிளை இல.03 (Mini Co-op City)
காலம்: 06.04.2013 சனிக்கிழமை காலை 9.30 மணி

குறிப்பு: ஏல விற்பனையில் கலந்து கொண்டு பொருள்களைப் பெற்றுக்கொள்பவர்கள் உடன் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை பெறுவதுடன் பொருளையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

தலைவர்
வலி. கிழக்கு தென்பகுதி
ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி. (N/7391) (6.7)


## அருங்காட்சியக விபத்து; ஆராய்வதற்கு சுயாதீனக் குழு

கொழும்பு,ஏப்.1

தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற விபத்துத் தொடர்பில் ஆராய்வதற்காக சுயாதீன விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தேசிய அருங்காட்சியகத்தில் கடந்த வியாழக் கிழமை படிக்கட்டுகள் உடைந்து வீழ்ந்ததில் 27 மாணவர்களும் ஐந்து ஆசிரியர்களும் நான்கு பெற்றோரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்தார். விபத்துக்கான உண்மையான காரணத்தை கண்டறியும் வகையில் சுயாதீன குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த விபத்தில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 12 மாணவர்கள் பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு நடராஜா

உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராஜா கடந்த (29.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், புவிகரன், சுதாகரன், றோகினி, தயாகரன், காமினி, காலஞ்சென்ற சியாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகுமார், சிறீதேவி, பிரதீபா, தர்சினி ஆகியோரின் மாமனும், றேணுகா, ராமநாத், சுயாகரன், அரன், சஜீவன், சகானா, தனுஜன், தினேஸ், இலக்கியா, இந்துசன், தர்ஷா, தனுஷா, மதுசினி, யஸ்வினி, மேகினி, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவிகரன்-0033148673244
சுதாகரன்-0033 699258785
தயாகரன்-0012 896245006
றோகினி-0049 20398420783
மனைவி- 0094 217903164

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.



# Study in MALAYSIA
## மலேசியாவில் உயர்கல்வி

மலேசிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்ற பின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகைமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகைமை:கணிதம், ஆங்கிலம் உட்பட O/L சித்தி.

ஏப்ரல் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

**Call : 0777-767818**

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
(35457)(6.7) (35457)(6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்யுங்கள்

## இந்தியா, ஜெனிவாவுக்கு அஞ்சாதீர் அரசிடம் தேசப்பற்று அமைப்புகள்

கொழும்பு,ஏப்.1

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று தேசப்பற்றுடைய அமைப்புக்கள் கூட்டாக இணைந்து அரசிடம் வலியுறுத்தவுள்ளன.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதன் பின்னர் தெற்கில் நடைபெறும் அனைத்து தேர்தல்களின் போது அரசை எதிர்க்க தேசப்பற்றுடைய அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

ஜெனிவாவுக்கோ அல்லது இந்தியாவுக்கோ அஞ்சி வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்று தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்தார்.

**வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அரசும் நாடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.**

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அரசும் நாடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று அவர் மேலும் கூறினார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புளே இவ்வாறு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## நரம்பில் ஏற்படும் குறைபாட்டால் பிள்ளைகளுக்கு 'ஒட்டிசம்' நோய்

### தேசிய சட்டம் வகுக்க முடிவு

கொழும்பு,ஏப்.1

'ஒட்டிசம்' நோய் தொடர்பான தேசிய திட்டமொன்றை வகுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஒட்டிசம் நோய் தொடர்பான தேசிய பணியகம் ஒன்றை ஸ்தாபிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று சுகாதார அமைச்சின் இளம், முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான சுகாதார சேவைகள் பிரிவின் பணிப்பாளர் பிரியந்த அத்தபத்து கூறினார்.

இந்தப் பணியகத்தின் ஊடாக குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் தொடக்கம் சுகாதார பணிப்பாளர் வரையான அனைத்து அதிகாரிகளுக்கும் ஒட்டிசம் நோய் தொடர்பிலான தெளிவூட்டல்கள் வழங்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார். பல்வேறு நடத்தைகளை வெளிகாட்டக்கூடிய நரம்பியல் குறைபாடு காரணமாக ஒட்டிசம் நோய் ஏற்படுகின்றது. இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளை சிறு வயதில் இனங்காண்பதன் மூலம் உரிய சிகிச்சைகளை வழங்க முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

ஒட்டிசம் நோய் காரணமாக மன அழுத்தம் ஏற்படுவதால் சிறுவர்களின் நடத்தைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பிரான்ஸிலிருந்து இலங்கையர் நாடு கடத்தல்

கொழும்பு,ஏப்.1

போலியான இந்திய கடவுச்சீட்டுடன் பிரான்ஸில் தங்கி இருந்த இலங்கையர் ஒருவர் நாடுகடத்தப்பட்டுள்ளார்.

நந்தகுமார் ராஜரட்ணம் என்ற (வயது-24) ஒருவரே, கடந்த 28 ஆம் திகதி சுற்றுலா விசாவுடன் இந்தியா சென்று, அங்கிருந்து டுபாய் ஊடாக பிரான்ஸ் சென்றுள்ளார்.

எனினும் அவரது கடவுச்சீட்டு போலியானது என்பதை அறிந்த பிரான்ஸ் அதிகாரிகள் அவரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாடு கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் இந்திய குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பை சேர்ந்த ஒருவரே தமக்கு இந்தக் கடவுச்சீட்டை பெற்றுக்கொடுத்திருந்ததாக அவர் விசாரணையின் போது தெரிவித்தார். (ச)

## பெபிலியான களஞ்சிய தாக்குதல்; தனிப்பட்ட பழிவாங்கலே

### விசாரணை செய்ய இரு பொலிஸ் குழுக்கள்

கொழும்பு,ஏப்.1

பொரலஸ்கமுவ, பெபிலியான வர்த்தக நிலையத்தின் களஞ்சியம் மீதான தாக்குதல் தனிப்பட்ட பழி வாங்கு தலின் வெளிப்பாடேயாகும். அதில் எத்தகைய அரசியல் தொடர்பும் இல்லை.

இவ்வாறு மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனை விசாரணை செய்ய இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் இனம் காணப்பட்டு எந்தவித பாரபட்சமுமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

பெபிலியான வர்த்த நிலையத் தாக்குதலில் சுமார் 60 பேர் கொண்ட குழு ஈடுபட்டுள்ளது. இந்தக் குழுவினர் யார்? எங்கிருந்து வந்தனர் போன்ற விவரங்களை திரட்டுவதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. விரைவில் உண்மையான குற்றவாளிகளை இனங்காண முடியும். அவர்கள் அனைவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர்.

நாட்டில் தன்னிச்சையாக சட்டத்தைக் கையில் எடுக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. இனிமேல் இத்தகையதொரு சம்பவம் இடம்பெறுவதற்கும் இடமளிக்கக் கூடாது. -என்றார். (ச)

## ஹெரோயின் வைத்திருந்தவர் சிக்கினார்

கொழும்பு,ஏப்.1

வெல்லம்பிட்டிய, சிறி அனந்தாராம பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 50 மில்லி கிராம் ஹேரோயின் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24.10.1924

மறைவு
11.04.2012



அமரர் இலட்சுமிப்பிள்ளை விநாயகர்

எமது பாடசாலையின் உப அதிபர் திருமதி இ.பற்குணராஜா அவர்களின் அன்புத் தாயார் இலட்சுமிப்பிள்ளை விநாயகர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளான இன்று (01.04.2013) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/ கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்.**

(C 8017) (7.6.11)


## நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி

### புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.1

நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இனவாதத்தை தூண்டி அதன் மூலம் வர்த்தக மற்றும் மத வழிபாட்டுத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் முயற்சி எடுக்கப் பட்டு வருகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் நபர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

ஏதேனும் ஓர் இடத்தில் இனக்கலவரம் இடம்பெற்றால் உடனடியாகச் சென்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட குழுக்களினால் தாக்குதல் நடத்தப்படக் கூடிய சில முக்கிய வர்த்தக நிலையங்கள், கட்டடங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இதேவேளை, மதவழி பாட்டுத் தலங்கள், பெபிலியான வர்த்தக நிலையம் போன்றவை தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18.03.1937



உதிர்வு
01.04.2010

அமரர் மேரி யோசப்பின் பாக்கியநாதர்

"உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்; அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்"
(யோவான் 14:3)

உங்கள் நினைவலைகள் எம் மனதை விட்டு அகலவில்லை.
உங்களை அன்புடன் நினைவு கூரும்

கணவர்: பாக்கியநாதர்
பிள்ளைகள்: றெஜி, றெகான், யூடிற்றோமேவன் றதீஸ்குமார்
மருமக்கள்: நிஜிதா, வதனி, தயாளினி
பேரப்பிள்ளைகள்: மரிய றியாங்கி, ஜெறோம், ஆன் செரன், ஆன் ஷி ரோனி
மற்றும் உறவினர்கள், அன்பர்கள்.

"மரியன்ஸ்"
கல்லூரி வீதி,
மானிப்பாய்.

(34914)(6.7.11)


## போலி மாணிக்கக் கற்களை விற்ற பெண் கைது

கொழும்பு,ஏப்.1

போலியான இரண்டு மாணிக்கக் கற்களை சுமார் ஐந்தரை இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ரம்புக்கென பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சாலியவெவ பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்தே நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் மத்தி, கோப்பாயில் நல்ல சுற்றாடலில் குறைந்த விலையில் 2பரப்பு 12குளி காணி விற்பனைக்குண்டு.

077 4255777
தொடர்புக்கு: 077 3561522

(34941)(6.7.1)



## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
05.06.1945



உதிர்வு
13.04.2012

அமரர் கதிரவேற்பிள்ளை தர்மலிங்கம் (கட்டி அத்தான்)

வல்வெட்டித்துறை நெடிய காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது குடும்பத் தலைவர் கதிரவேற்பிள்ளை தர்மலிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவு பிரார்த்தனை இன்று (01.04.2013) எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பெரிய தம்பிரான் கோயிலடி,
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை.
T.P-021 791 5269,
077 288 1188

(27783)(6.7.11)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மை போற்றுவோம்...

இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து அடக்கு முறைக்குள் சிக்கித் தவிக்கும் ஓர் மனித இனம் தான். பெண்ணினம் என்றால் அது மிகையாகாது. பல தலைவர்களும், சமூகவியலாளர்களும் பெண் அடிமை நிலை பற்றி வெளிச்சம் போட்டுக் காட்டியும் அந்தக் காலத்திலிருந்த நிலைமை, பெண்கள் எல்லாவற்றிலும் முன்னேறி சரித்திரம் படைத்து வரும் இந்தக் காலத்திலும் தொடர்ந்து வருகின்றது. பெண்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

ஆணாதிக்கம் தலை தூக்கும் போது பெண் அடங்கிப் போவது எம்முடைய வாழ்வியலின் உண்மை. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் ஒரு பெண்ணின் அங்கத்துவம் மிக முக்கியமானது ஒன்றாகவே இருக்கின்றது. அன்பு, பரிவு, பாசம், கட்டுப்பாடு போன்றவை பெண்ணிடமிருந்தே முழு அங்கத்தவர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

ஊடகங்களில் எப்போதாவது வரும் செய்திகள், மேடைகளில் பெண்ணடிமை விலக்கு உடைப்போம். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்துவோம் என்று குரல்கள் அத்தோடு அடங்கிவிடும். ஆனால் அந்த நிலைமை மாறுவது இல்லை இன்னும் எத்தனையோ பெண்கள், பெண் குழந்தைகள் , வயோதிப மூதாட்டிகள் என்ற பாகுபாடின்றி வஞ்சிக்கப்பட்டு அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலைக்கு முயற்சித்து வாழ்வை வெறுத்து எதற்காக வாழ்கின்றோம் என்று தெரியாமல் வாழ்க்கை எனும் பாதையில் பயணிப்பவர்கள் தான் இன்று எங்கள் மத்தியில் அதிகம். அனைவரும் சிந்திக்கவேண்டியதொன்று. பெண் உடல் போற்றத்தக்கது. புனிதமானது. அதை களங்கப்படுத்த நினைக்கும் ஆண்களாயினும் பெண்களாயினும் அவர்கள் மனித வர்க்கத்திலிருந்து அப்பாற்பட்டவர்களுள் என்றே கூற முடியும். கல்வி, தொழில், நாகரிகம் என்று பெண்கள் முன்னேறிவிட்டாலும் பாலின வேறுபாடு பேதம்தான் தலைதூக்கி இருக்கின்றது. பலர் புரட்சிகர எண்ணத்துடன் பெண் விடுதலைக்காக போராடினாலும் இருபத்தொராம் நூற்றாண்டு காலம் வரை பெண்மை மதிக்கப்படுவதில்லை என்பதே உண்மை. ஆண் , பெண் ஏற்றத்தாழ்வுகள் இன்றி பெண்மை எனும் குல விளக்குகள் மதிக்கப்பட்டு சுதந்திரத்தையும் எதிர்கால வாழ்வையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் உண்டு. வறுமையை காரணம் கூறி மேலை நாடுகளுக்கு பெண்களை அனுப்பி அவர்கள் வாழ்வை சீர்குலைக்காமல் போதிய கல்வியும், சுய கட்டுப்பாடும் அளித்து பெண்களை மேன்மைப்படுத்தி பெண்ணுக்குரிய மரியாதையை கொடுத்து பெண்மை போற்றுவோம்.



விமலதர்சினி
மத்திய தாஸ்

# வாழ்க்கை ஓர் வரைபடம்

■ நிவேதிதா மோகன்,



2

"வீட்டுக்கு மூத்த பிள்ளை என்பதால் அவள் மீது தான் எல்லா பொறுப்புகளும் குவிந்தது. அப்பாவின் இறப்புக்கு பிறகு அம்மாவின் வாயால் பாச வார்த்தை கேட்டே பல வருடங்கள் அவருக்கு. ஆனால் ஊரில் உள்ள எல்லோரும் பாராட்டும் அளவுக்கு நல்ல பிள்ளையாய் வளர்ந்தாள்.

தொலைபேசி அழைப்பைக் கேட்டு திகைத்து நின்றாள் வசந்தி. நிலாவின் அப்பா இறந்துவிட்டதாகக் கூறினார்கள். இதை எப்படி நிலாவிடமும், தேவாவிடமும் கூறுவது என்று மனதுக்குள்ளேயே தவித்தாள். ஆனால் இந்த விடயத்தைச் சொல்லியே ஆக வேண்டும் என்றுவிட்டு நிலாவிடம் வந்து கூறியவுடன் ஒன்றுமே பேசாமல் ஒரு மூலையில் போய் அமர்ந்து கொண்டாள் நிலா. அவளால் அப்பா இல்லாத வாழ்க்கையை நினைத்து பார்க்கக்கூட முடியவில்லை. தேவாவிடம் கூறியவுடன் கதறி அழத் தொடங்கினான். மாலை 6 மணியளவில் நிலாவின் அப்பாவின் பிரேதம் வீட்டுக்கு வந்தது. தேவா அப்பாவின் உடலைப் பார்த்து அழுது கொண்டே இருந்தான். ஆனால் நிலா அந்த இடத்தை விட்டு வரவேயில்லை.

இதுவரை நிலாவுக்கு மட்டுமே தெய்வமாய் தெரிந்த அப்பாவைப் பற்றி அன்றுதான் தெரிந்தது. அந்த ஊரே நிலாவின் அப்பாவைத் தெய்வம் போல்தான் பார்த்தார்கள்.

மறுநாள் காலை நிலாவின் அப்பாவின் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. நிலாவின் அம்மா, தேவா, சுற்றி உள்ள எல்லோரும் அழுகின்றனர். ஆனால் நிலாவின் கண்ணில் இருந்து இன்னும் ஒரு துளி கண்ணீர் கூட வரவில்லை.

அப்பாவின் உடல் வீட்டை விட்டுச் சென்று கொஞ்ச நேரத்தில் கதறி அழத் தொடங்கினாள் நிலா. எல்லோரும் அவளுக்கு அறிவுரை கூறினார்கள். ஆனால் அவளால் அப்பாவின் இறப்பை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

கடைசியில் வீட்டின் மூன்று மூலையிலும் நிலா, நிலாவின் அம்மா மற்றும் தேவா. நிலாவின் அம்மாவுக்கு என்ன செய்யப்போகிறோம் என்றே தெரியவில்லை. இருந்தாலும் "இனி என் பிள்ளைகளை நான்தான் பார்க்க வேண்டும்" என்று கூறிவிட்டு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தூங்கச் சென்றாள்.

மறுநாள் காலை வழக்கம் போல எழுந்து கணவனைப் பற்றி ஒரு கணம் யோசித்த நிலாவின் அம்மா இனி எப்படி வாழ்க்கையைக் கொண்டு போகப்போகிறோம் என்று எண்ணியவர், திடீர் என்று மயக்கம் போட்டு கீழே விழுந்தாள்.

இதைப் பார்த்த நிலா ஓடிப் போய் வசந்தி அக்காவை அழைத்து வந்தாள். பின் நிலாவின் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற நிலாவின் அம்மாவுக்கு ஒரு திடுக்கிடும் தகவல், மருத்துவர் நிலாவின் அம்மாவிடம் "நீங்கள் ஐந்து மாத கர்ப்பிணி" என்று கூறியவுடன் வேர் இல்லாத மரம் போல் சரிந்தாள். நிலாவின் அம்மா, மூன்றாவது பிள்ளையா? அப்பா இல்லாமல் மூன்று பிள்ளைகளையும் நான் எப்படி வளர்ப்பேன்? என்று நிலாவின் அம்மாவுக்குப் பல யோசனைகள்.

மனதில் பல கேள்வி, பல சோகம் இருந்தாலும் அவற்றை வெளிக்காட்டாமல் நிலாவிடமும் தோவாவிடமும் உங்களுக்கு ஒரு தங்கையோ தம்பியோ பிறக்கப் போகிறார் என்று கூறியவுடன், தேவா எனக்கு தம்பி தான் வேண்டும் என்றான். உடனே நிலா இல்லை இல்லை, எனக்கு தங்கச்சி தான் வேண்டும் என்றாள். அதற்கு நிலாவின் அம்மா சண்டை பிடிக்காமல் போய் படியுங்கள், என்று கூறி அனுப்பிவிட்டு இனி எப்படி வாழ்க்கையை தொடங்குவது என்று யோசித்தாள்.

கணவனின் இறப்புக்கு பிறகு நிலாவின் குடும்பத்துக்கு யாருமே உதவவில்லை. ஆனால் அதைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல் தனிப்பெண்ணாக செயற்பட்டாள்.

அடிக்கடி கணவனின் நினைவுகள் வந்தாலும் பிள்ளைகளை நினைத்துப் பார்க்கையில் எல்லா கவலைகளும் அவளுக்குப் பறந்து போய்விடும்.

நிலாவின் அம்மாவுக்கு மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதாவது நிலாவுக்கும் தேவாவுக்கும் ஒரு தங்கை பிறந்தாள். அவளுக்கு ஜோதி என்று பெயர் வைத்தனர். நிலாவின் அம்மா ஜோதி மீது மற்றவரை விட அதிக அன்பு வைத்து இருந்தார். காரணம் அப்பாவையே பார்க்காத பிள்ளை.

அப்பாவின் இறப்புக்கு பிறகு நிலா தனித்து விடப்பட்டாள். அந்த மனநிலை அவளுக்கு பாசத்தில் வளர்ந்த அவள் இப்பொழுது பாசத்துக்கு ஏங்கும் பட்சி போல ஆகிவிட்டாள்.

வீட்டுக்கு மூத்த பிள்ளை என்பதால் அவள் மீது தான் எல்லா பொறுப்புகளும் குவிந்தது. அப்பாவின் இறப்புக்கு பிறகு அம்மாவின் வாயால் பாச வார்த்தை கேட்டே பல வருடங்கள் அவருக்கு. ஆனால் ஊரில் உள்ள எல்லோரும் பாராட்டும் அளவுக்கு நல்ல பிள்ளையாய் வளர்ந்தாள்.

**நாள்கள் மாதங்கள் ஆகியது, மாதங்கள், வருடங்கள் ஆகின...**

நிலாவுக்கு இப்பொழுது பதினைந்து வயது. நிலா வளர வளர அவள் அழகு, நடை, உடை எல்லாமே உயர்ந்தன. ஆனால் அவளின் குணம், அவளின் அப்பா மீது கொண்ட பாசம் மட்டும் மாறவே இல்லை. மீன் போல இரு விழி, வில் போன்ற புருவம், அன்ன நடை, குடத்தின் கழுத்து போல ஒரு இடை, மயிலின் தோகை போல் நீளமான முடி. எல்லாமே நிலாவின் அழகுக்கு அழகு சேர்த்தது.

ஒருநாள் வழக்கம் போல பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த நிலாவுக்கு வீதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று மனதை உறுத்தியது....

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலெக்ரிசிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## வைகுண்டம் போகமுடியுமா?

பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. மழை பொய்த்துவிட்டது. மரங்கள் எல்லாம் கருகி, நிலம் வரண்டு, வெடிக்கத்தொடங்கியிருந்தது. ஆறுகள், குளங்கள் எல்லாம் வற்றியிருந்தன. தண்ணீர் எட்டாப்பொருளாக மாறிப்போனது. நாவறண்டு தாகத்தால் மக்கள் தவிக்க ஆரம்பித்திருந்தனர்.

இனியும் தாமதித்தால் எல்லோரும் நீரின்றி இறக்கவேண்டியதுதான். அந்த அப்பாவி மக்களுக்கு முறையிட அரசனைவிட்டால் வேறு யாருளர்? அனைவரும் ஓட்டமும் நடையுமாக அரசனிடம் விரைந்தனர். மக்களை அரசவைக்குள் விடுவதற்கு காவலாளி தயாராயில்லை.

''உங்களிடமிருக்கும் விலை மதிப்பற்ற பொருளே தேனும் தந்தால் மட்டுமே உள்ளே அனுமதிப்பேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். அவர்களிடம் அப்போது விலைமதிப்பற்ற பொருள் தண்ணீர் மட்டுமே. பயணக்களைப்பை போக்க தம்மிடம் கொண்டு வந்திருந்த தண்ணீர்ப்போத்தலில் எஞ்சியிருந்த தண்ணீரைக் காவலாளியிடம் கொடுத்த பின்னே அவர்களுக்கு மன்னனின் தரிசனம் கிட்டியது.

மன்னன் நீச்சல் தடாகத்தில் குளித்துவிட்டு அப்போதுதான் அரசவைக்கு வந்தான். அவனுக்காக அந்நிய தேசங்களில் இருந்து சேவகர்கள் குடம் குடமாக பன்னீரைக் கொண்டு வந்து நீச்சல் தடாகத்தை நிறைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் குடங்களை பார்த்தபோது, மக்களுக்கு அதுவரை அடங்கியிருந்த தாகம் இன்னும் அதிகமாய் எழுந்தது.

மக்களே! என்ன பிரச்சினை உங்களுக்கு? திடீரென்று என்னைப் பார்க்க வந்த நோக்கம் என்னவோ? என்று அலட்சியமாக விசாரித்தான் மன்னன்.

மன்னா! நாடெங்கும் ஒரே வறட்சி. மழையோ இல்லை. எங்கும் தண்ணீர் பஞ்சம். ஆறு, குளம், கிணறு எல்லாம் வற்றிவிட்டன. வாயில் வைக்க ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை. இந்த நிலை நீடித்தால் இன்னும் சில நாள்களில் நாங்கள் எல்லோருமே இறந்துவிடுவோம் என்று தங்கள் குறையை எடுத்துரைத்தார்கள்.

மன்னன் பெரிதாகச் சிரித்தான். ப்பூ! இவ்வளவுதானா? நான் என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன். உங்களுக்கு தாகத்துக்கு தண்ணீர் இல்லை. அதுதானே பிரச்சினை. பேசாமல் நீங்கள் தண்ணீருக்கு பதிலாக என்னைப் போல பன்னீரை அருந்துங்கள். பிரச்சினை தீர்ந்துவிடும் என்று மக்கள் பிரச்சினைக்கு தீர்வு[?] சொன்னான் அந்த அறிவிலி மன்னன்.

நமது சமூகத்தில் உள்ள பல அதிகாரிகள் பலரும் இப்படித்தான். ஏதேனும் ஒரு பிரச்சினைக்கான மூல காரணத்தை கண்டறிந்து அதற்கான பரிகாரத்தை தேடாமல், பொருத்தமற்ற முடிவுகளை எடுத்து விடுகிறார்கள். அல்லது மக்கள் மீது சீறிப்பாய்ந்து தமது இயலாமையை மறைக்க முயல்வார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச சபை ஒன்றின் அலுவலகத்தில், அங்கு வருவோரின் தாகம் தீர்க்க தண்ணீர் இல்லை. அதனை உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்திய போது, அவர்கள் பொறுப்பற்ற முறையில்–

ஊடகங்களிடம் முறையிடுங்கள். தீர்வு கிடைக்கும். நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று ''அதிவிவேக' மன்னனின் பாணியில் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு பிரதேசத்தின் குறைகளைத் தீர்க்கவேண்டிய அலுவலகத்திலேயே தண்ணீர் இல்லையென்றால், அந்த பிரதேசத்தில் தண்ணீரின் நிலை எப்படியிருக்கும்? ஆனால் அதைப்பற்றி அந்தப்பிரதேச சபை எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை. மாறாகத் தன்னுடைய இயலாமையை மக்களிடம் ''ஏறிப்பாய்ந்து'' தீர்க்க முனைந்திருக்கிறது. தமது அலுவலகத்திலேயே தண்ணீரை உரிய முறையில் பேண முடியாத நிர்வாகமும் அதிகாரிகளும் ஒட்டுமொத்த பிரதேசத்தின் சகல குறைகளையும் களைவார்கள் என்று மக்கள் எப்படி நம்புவார்கள்? கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வைகுண்டத்துக்கு போக முடியாதுதானே...!

# அமைச்சரவையை அவசரமாக அழைக்க ஹக்கீம் கோரிக்கை

## முஸ்லிம் நிறுவனம் தாக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதியுடன் வாக்குவாதம்

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையில் இருந்து
■ கோகுலன்

இன்னும் இரண்டு வாரங்களில் இலங்கை மக்கள் தமது தேசிய புதுவருடத்தை கொண்டாடவிருக்கிறார்கள். வர்த்தக நிலையங்கள் பரபரப்புடன் புதுவருட பண்டங்களை விற்பனை செய்வதில் இறங்கியுள்ளன. விற்பனை மட்டம் இன்னும் சில தினங்களில் உச்சக் கட்டத்தை அடைந்துவிடும் என்று சொல்லத்தேவையில்லை.

இந்தமுறை அரச தரப்பினருக்கு விடுமுறை ஏதும் இருக்காது போல் தோன்றுகின்றது. பல்வேறு முனைகளில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஐ.நா.மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை அரசு மட்டுமல்ல, இலங்கை மக்கள் அனைவருமே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அது ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கமானது இன்னமும் உலகின் பல தலைநகர்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு அமைச்சரவைக் கூட்டமொன்றை அவசரமாகக் கூட்டும்படி கேட்டுக் கொண்டார். ஆடைகள் தயாரிப்பு நிலையங்களின் நிறுவன களஞ்சியமொன்றின் மீதும், அதன் தலைமையகத்தின் மீதும் நடத்தப்பட்டிருந்த தாக்குதல் ஒன்றையடுத்தே ஹக்கீமின் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமானதாகும். இந்தச் சம்பவம் முஸ்லிம்களுக்கு எதிராக ஆரம்பமானதொன்றல்ல. ஒரு சிங்களப் பெண்ணுக்கும், முஸ்லிம் வாலிபனுக்குமிடையில் ஏற்பட்டிருந்த தனிப்பட்ட விடயத்தின் விளைவு என்று ராஜபக்ஷ கூறியிருந்தார். தான் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக அந்தப்பெண் முறைப்பாடு செய்திருந்ததாகவும் கூறப்பட்டது. ஆனால் பொலிஸார் நடத்தியுள்ள விரிவான விசாரணைகளின் பின்னர் தாக்குதலுக்கும் அந்தச் சம்பவத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து அலரி மாளிகையில் ஜனாதிபதிக்கும், ஹக்கீமுக்குமிடையில் சூடான வாக்குவாதம் நடைபெற்றிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. முஸ்லிம் சமூகத்துக்கு தன்னால் முகம் கொடுக்கவே முடியாமல் இருப்பதாக ஹக்கீம் முறைப்பாடு செய்துள்ளார்.

அமைச்சரின் ஊடக ஆலோசகரும், அவரது சகோதரருமான ஏ.ஆர்.ஏ.ஹபீஸ் கடுமை தொனிக்கும் அறிக்கையொன்றை விடுத்திருந்தார். அதே கருத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கட்டுகஸ்தோட்டையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டிருந்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமய மற்றும் அமைதியின்மைகள் தொடர்பாக விவாதிக்க அமைச்சரவையைக் கூட்[illegible] அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி, அமைச்சர் றிச்சாட் பதியுதீன் மற்றும் ஏ.எல்.எம் அதாவுல்லா போன்றவர்களையும் தொடர்புகொண்டு கூட்டத்துக்கு வரும்படி அழைத்துள்ளார். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் அரசினால் மேற்கொள்ளப்படுவதாக இருக்க வேண்டும். நாட்டின் ஆட்சியந்திரமும் அதனைப் பொறுப்பேற்க வேண்டும். சமய தீவிரவாதிகள் அல்லது போராளிக் குழுக்கள் சட்டத்தைத் தம் கையில் எடுக்க அனுமதிக்கலாகாது. இந்த அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் கௌரவத்துக்குரிய பௌத்த குருமார்களையும் இந்த சமய ரீதியிலான தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொலிஸ்தரப்பு தகவல்களின்படி சுமார் 500 பேர் கொண்ட கும்பல்-இவர்களில் சிலர் மஞ்சள் அங்கி அணிந்திருக்கிறார்கள், இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாக விரைந்து சென்றுள்ள உதவிப் பொலிஸ்மா அதிபர், அனுரா சேனநாயக்கா அரசத் தலைவர்களுக்கு தகவல் தருகையில் இந்தத் தாக்குதல் ஒரு வல்லுறவு நிகழ்ச்சிக்கு எதிராகவே நடைபெற்றுள்ளதாக கூட்டத்தில் இருந்தவர் தெரிவித்ததாக அறிவித்துள்ளார். இது அதிகம் பிரபல்யமில்லாத ஒரு குழுவினால் நடத்தப்பட்டிருப்பதாகப் பின்னர் தெரியவந்தது. சம்பந்தப்பட்ட வர்த்தக உதவி அமைச்சர் ஒருவர் அரச தலைவர்களுடனான சந்திப்பொன்றுக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அவரது வர்த்தக நிறுவனத்துக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் குறித்து ஊடகங்களிடம் அதிகம் பேச வேண்டாம் என்று அவர் கேட்கப்பட்டதாகவும் அவ்வாறு செய்தால் மக்கள் உணர்ச்சியை மேலும் அதிகரிப்பதாக இருந்துவிடும் என்று கூறப்பட்டதாகவும் தெரிகின்றது. பொலிஸ் விசேட அதிரடி படைகளும் ஆயுதம் தரித்த இராணுவமும் நிலை நிறுத்தப்பட்டதையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஜனாதிபதியுடன் ஹக்கீம் நடத்திய உரையாடலின் போது அமைச்சரவை கூட்டமொன்றை அவசரமாகக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லையென்றும் அமைச்சர் விரும்பினால் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமொன்றை நடத்தலாம். அதில் அமைச்சர் தமது குறைபாடுகளைக் கூறலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்ததாகத் தெரிகின்றது. பௌத்த குருமாரின் சிறு குழுவொன்று சில பொதுமக்கள் குழுக்களுடன் இணைந்து முஸ்லிம் வர்த்தக நிலையங்களின் மீது தாக்குதல் நடத்த முற்படுகிறார்கள். புதுவருட தினத்துக்கு முன் இந்த நடவடிக்கைகளை அதிகரித்து முஸ்லிம் வர்த்தக நிலையங்களை மக்களை பகிஷ்கரிக்கச் செய்வதே நோக்கம் என்று அமைச்சர் அச்சம் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலைமை குறித்து அரசுக்கு நன்கு தெரியும். அதனால் குழப்பம் விளைவிக்க துணியும் குழுக்கள் [illegible]து நடவடிக்கை எடுக்கும் படி பொலிஸாருக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. இப்படியான சம்பவங்களை சகல பகுதிகளிலும், கட்டவிழ்த்து விடும் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என பொலிஸ் புலனாய்வுத் துறையினர் மறுத்துள்ளனர்.

இவ்வாறான 20 குழுக்களை இனம் கண்டிருப்பதாகவும், கடந்த வாரம் கொட்டாவெளியில் பிரார்த்தனை நிலையமொன்றைத் தாக்கிய ஒரு குழுவை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினார்கள்.

குறித்த சம்பவத்துடன் தங்களை சம்பந்தப்படுத்துவதை பொதுபலசேனா என்ற அமைப்பு மறுத்துள்ளது. குறித்த சம்பவத்தைத் தாங்கள் கண்டிப்பதாகவும் கூறியுள்ளதுடன் தங்கள் அமைப்புக்கு அவமானம் ஏற்படுத்துவதற்குச் சிலர் தங்களை இதில் இணைத்து செய்தி வெளியிட முனைகிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரச தகவல் திணைக்களம் வெள்ளி இரவு அரச தரப்பில் விடுத்த ஓர் அறிக்கையில் சமூகங்களுக்கிடையில் வன்செயல்களையும், வெறுப்புணர்ச்சிகளையும் வளர்க்கக்கூடிய வதந்திகள் பரவும் வகையில் செய்தி பரவுவதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. முப்பது ஆண்டுகால போரை முடித்து வைத்துள்ள நிலையில் அதன் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளை இல்லாமல் செய்வதற்கு வெளிநாட்டு சதித்திட்டங்கள் நடைபெறும் வேளையில் அமைதியையும், ஒற்றுமையையும் நாட்டில் பாதுகாக் வேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் கடமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை வழமையாக நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லை. பெரும்பாலான அமைச்சர்களும் அம்பாறையில் இடம்பெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியில் பங்கேற்கச் சென்றிருந்தனர்.

அரசுக்கு பிரச்சினைதரும் இன்னொரு விடயம் கடந்த வாரம் நடந்திருப்பது என்னவென்றால் இலங்கை சட்ட வல்லுனர்களின் 39 ஆவது வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டமையாகும். இந்த நிகழ்வில் உத்தியோகபூர்வ தலைவராக உபுல் ஜயசூரிய பொறுப்பேற்றுக் கொண்டார். ஷிராணியை இந்தச் சட்டத்தரணிகள் சங்கம் இன்னமும் பிரதம நீதியரசராக வவே கருதுகிறது. அதனால் தான் தற்போது 44, ஆவது பிரதம நீதியரசராகவிருக்கும் மோகன்பீரிஸ் அழைக்கப்படவில்லை. ஜனாதிபதி சட்டத்தரணி என்ற வகையிலும் கூட அவருக்கு அழைப்பு விடுக்கப் படவில்லையென்று தெரிகிறது. அரச தரப்பு சட்டத்தரணிகள் பலரும் ஷிராணியைத் தவிர்த்து மோகான் பீரிசை அழைப்பதற்கு எடுத்ததாகக் கூறப்படும் முயற்சிகள் எதுவும் பலித்ததாகத் தெரியவில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகளை ஆலோசித்து முடிவுகள் எடுப்பது நல்லது.

**இடபம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**கடகம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் குறையும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்.

**நாளை**

பங்குனி-20 செவ்வாய்க்கிழமை 02.04.2013
திதி: ஸப்தமி பி.இ.01.51 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ. 02.01 வரை
சுபநேரம்: 10.40- 12.10 வரை
இராகுகாலம்: 03.10- 04.40 வரை

**துலாம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** மன உளைச்சல் ஏற்படும். குடும்பத்தாரின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்ப செயற்படுங்கள். அடுத்த வர்களை குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**தனுசு:** சில காரியங்களை நீங்களே முன்னின்று. முடிப்பது நல்லது. உறவினர், நண்பர்களின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மகரம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். வயிற்றுவலி, தலைசுற்றல் விலகும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 8 | | | | 4 | 6 |
| 1 | 9 | | | 7 | | | | |
| 6 | 8 | 5 | | 9 | | | | 3 |
| 7 | | | 5 | | | | 8 | |
| 4 | | 9 | | 8 | | 3 | | 5 |
| | 3 | | | | 4 | | | 7 |
| 2 | | | | 6 | | 1 | 7 | 4 |
| | | | | 4 | | | 3 | 9 |
| 9 | 4 | | | | 1 | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 1 | 3 | 2 | 5 | 8 | 6 | 7 |
| 7 | 2 | 6 | 1 | 8 | 4 | 9 | 3 | 5 |
| 8 | 3 | 5 | 7 | 6 | 9 | 2 | 1 | 4 |
| 2 | 5 | 7 | 6 | 9 | 1 | 3 | 4 | 8 |
| 1 | 8 | 9 | 4 | 5 | 3 | 7 | 2 | 6 |
| 6 | 9 | 4 | 2 | 7 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 9 | 3 | 8 | 4 | 7 | 1 | 5 | 2 |
| 4 | 1 | 8 | 5 | 3 | 2 | 6 | 7 | 9 |
| 5 | 7 | 2 | 9 | 1 | 6 | 4 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
06.07.1962

மறைவு
02.03.2013

திருமதி **யேசுதாசன் மேரிகமலா** (ராஜி)

கணப் பொழுதும் எண்ணவில்லை எம்
கலங்கரை விளக்கே
நீ இமைப் பொழுதில் எம்மை விட்டகல்வாயென
நொடிப் பொழுதும் மறவாமல்
எம்மை மடிக்குள்ளே தினம் பொத்திவைப்பாய்
ஆறவில்லையம்மா வேரோடு சாய்ந்தாலும் உன்
விழுதம்மா நாங்கள் பொழுதானாலும் உன்
நினைவுகள் தான், பொழுது புலவர்வதும் உன்னில் தான்

என்றும் நினைவுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(34965) (45.6.7)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **நிர்மலா ஸ்ரீகரன்**

திதி: அபரபக்ஷ சஷ்டி

அன்பே நிர்மலா ஆண்டுகள் மூன்று என்ன
எம் உயிர் உள்ள வரை எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவு
எம்மை விட்டகலா! நினைவிலும் நீரே
கனவிலும் நீரே சொல்லாமல் தெரியாமல்
சென்றது தான் எங்கே? நீர் பிரிந்த நாளை
விட நீர் இல்லாத காலம் தான் எம்மைக்
கதறவைக்கின்றது. நீர் எங்கிருந்தாலும் உமது
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



நினைவுகளுடன்
ஸ்ரீகரன் - கணவர்
(பரன் - ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)
பெற்றோர் மற்றும் உறவினர்கள்.

21 A, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(34940) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களுத்துறை, பேருவளை சப்புகொட விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத வழிபாடுகளின் பின்னர் அங்கு பொதுமக்களைச் சந்தித்து உரையாடியபோது... (ச)

# திரிசங்கு நிலையில் மு.கா.

## இணைந்திருப்பதா, வெளியேறுவதா என்று திணறல்

கொழும்பு, ஏப்.1

முஸ்லிம்கள் மீதான கெடுபிடிகள் தொடர்ந்து தீவிரமடைந்து வரும் நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம், அமைச்சர்கள் தொடர்ந்தும் அரசுடன் இணைந்திருப்பதா? அல்லது ராஜினாமா செய்வதா? என்று முடிவெடுக்க முடியாத திரிசங்கு நிலையில் காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் குறித்து கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்றுமுன்தினம் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் கூடி ஆராய்ந்தனர்.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிஉயர் பீடம் கூடி இரவு வரை இது குறித்து விரிவாக ஆராய்ந்து கொண்டிருந்தது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், முஸ்லிங்கள் மீதான கெடுபிடிகள், வன்முறைகள் குறித்து விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றைக் கூட்டத் தேவையில்லை.

இது தொடர்பாக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராய முடியும் என்று அதற்கு ஜனாதிபதி தெரிவித்தார். இதுகுறித்தும் அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளை, முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தப்பட்டது என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலர் எம்.ரீ. ஹசன் அலி தெரிவித்தார்.

ஆனால் அதன் பின்னரும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் தொடர்வதால் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண் டிய நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை பொது பல சேனா நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக அச்சுறுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே. (ச)

# உகண்டாவின் நிலை இலங்கையிலும் வரலாம்

## எச்சரிக்கிறார் பாஸ்கரா



கொழும்பு, ஏப்.1

இலங்கையில் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டமை, உகண்டா ஜனாதிபதியாக இருந்த இடிஅமீன் காலத்தில் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலைகளைப் போன்று இலங்கையிலும் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்குவதாக அமையும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் அசாதாரண சூழ்நிலைகளும் இனவாத, மதவாத செயற்பாடுகளும் இலங்கையின் இருப்பை கேள்விக் குறியாக மாறுவதற்கான சூழ்நிலையைக் காட்டுகின்றது.

உகண்டாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட வேளையில் அங்கு இருந்த காடையர்கள் அந்த நாட்டின் செல்வந்தர்களாக இருந்த இந்தியர்களின் கடைகளை உடைத்து அந்த இந்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேற வழிசமைத்தனர்.

அதேபோல் இலங்கையிலும் நடைபெறும் அசாதாரண சூழ்நிலைகளை உற்று நோக்கும் போது இலங்கைக்கும் அந்த நிலை ஏற்படும் என்று அஞ்சத் தோன்றுகின்றது.-என்றார்.(ச)

# மோல்டா கடவுச்சீட்டுடன் ஈரான் பிரஜைகள் மாட்டினர்

கொழும்பு,ஏப்.1

போலியான மோல்டா நாட்டு கடவுச் சீட்டைப் பயன்படுத்தி பிரிட்டன் செல்ல முயற்சித்த மூன்று ஈரான் நாட்டு பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடவுச்சீட்டு தொடர்பில் எழுந்த சந்தேகத்தை அடுத்து, இலங்கை விமான சேவை ஆணைக்குழு ஆவண சோதனை அதிகாரிகளால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்த நபர்களிடம் ஈரான் நாட்டு கடவுச் சீட்டும் காணப் பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ச)

80 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY

திருமதி இரட்ணலிங்கம் கமலாதேவி



HAPPY BIRTH DAY

இன்று, எங்களை உலகுக்குக் காட்டிய
அற்புதமான அம்மாவின்
80 ஆவது பிறந்த நாள்.
அம்மா உங்களுக்கு நாங்கள் பிள்ளைகளாகப் பிறந்தது
பெருமைப்பட வைத்ததோதெரியவில்லை. உங்களைப்
போல் உத்தமமான அம்மா கிடைத்ததற்கு நாங்கள்
பெருமைப்படுகின்றோம்.

HAPPY BIRTH DAY



இன்னும் பல்லாண்டு காலம் ஆனைப்பந்தி ஞானவைரவர்
அருளால் வாழ வாழ்த்தும்


அன்பு மகன்மார்: காண்டீபன் (இந்தியா),
செங்கை ஆழியான் (கனடா),
அன்பு மகள்மார்: தாரணி (கனடா), ஆனந்தி (யாழ்ப்பாணம்),
அன்பு மருமகன்மார்: பிரபாகரன் (கனடா), கணேஷ் (யாழ்ப்பாணம்),
அன்பு மருமகள்மார்: கௌரி (கனடா), அலன் (இந்தியா),
அன்புப் பேரன்மார்: அர்ஜுன், செந்துஜன், புருசோத்,
அன்புப் பேர்த்திமார்: இரட்னேஸ்வரி, வைணவப் பிரியா, மதுமதி.

271/3, நாவலர் லேன்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(35530) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டும் ஈரவிழிகளும்



**பிறப்பு**
**31 * 12 * 1939**

**இறப்பு**
**01 * 04 * 2011**

# அமரர் வல்லி தம்பிராசா

**திதி: 08.04.2013**

ஈராண்டுகள் சென்றது அப்பா
இன்னும் எம் ஈர விழிகள் காயவில்லை
காலனின் சதி வலையில்
மாட்டியதேனோ
எம்மை கண்ணீர்க் கடலில்
மூழ்க விட்டு சென்றது எங்கோ...
அப்பா என்று அழைத்திட
தினம் நாம் ஏங்குகின்றோம்
ஒரு முறையேனும் உம் திரு முகம்
காட்டி செல்வீர்களா அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
தினம் தினம் இறைவன் அடி
தேடிச் செல்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**கலிகை, துன்னாலை கிழக்கு,**
**கரவெட்டி.**

**குடும்பத்தினர்.**

(34883)(10,6,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன முரண்பாட்டை தவிர்க்க விசேட திட்டம்

இரத்தினபுரி,ஏப்.1

நாடு முழுவதிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இன முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் விசேட திட்டம் ஒன்றை நடைமுறை படுத்தியுள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் வாழும் சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு இன ஒற்றுமை குறித்து அறிவுரைகளை வழங்குவதே இந்தத் திட்டமாகும்.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்த செயலமர்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை அலவத்துகொடை பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ச)



மூதூர்,கங்குவேலியில் பொது மக்களைச் சந்திப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் உட்பட்ட குழுவினர் சென்றிருந்தனர். (ச)

## தேசத்தின் மகுடத்தை நிறுத்தி அருங்காட்சியத்தை அமைக்கவும்

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.1

தேசத்தின் மகுடம் போன்ற களியாட்டங்களை நிறுத்தி, போர் அருங்காட்சியகம் ஒன்றை அரசு அமைக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் கோரியுள்ளார்.

தேசத்தின் மகுடம் போன்ற பயனற்ற களியாட்டங்களினால் வருடாந்தம் மக்கள் பணம் விரயமாகின்றது. இந்தப் பணத்தைப் பயன்படுத்தி போர் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

தேசிய அருங்காட்சியகத்தில் முக்கியமான பொருள்கள் திருடப்பட்டுள்ளதனால், அதன் ஒருபகுதியில் போர் அருங்காட்சியகத்தை அமைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை



அரசு சரியான முறையில் வெளிப்படுத்தவில்லை. எனினும், புலிகளின் வலையமைப்பு மிகவும் தீவிரமான முறையில் நாட்டுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான போர் அருங்காட்சியகங்கள் வியட்னாம், இஸ்ரேல் போன்ற நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

போரினால் ஏற்பட்ட அழிவுகள் இந்த அருங் காட்சியகங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

## போலி நாணயத்தாள் பயன்பாடு அதிகரிப்பு



கொழும்பு,ஏப்.1

நாட்டில் போலி நாணயத் தாள்களின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகிறது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

போலி நாணயத் தாள்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

போலி நாணயத்தாள்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு சுலபமான வழிமுறைகள் உள்ள நிலையில், அவை தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று மத்திய வங்கியின் பிரதித் தலைவர் தனசிறி திஸாநாயக்க தெரிவித்தார். (ச)

# முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியங்கள் நிறுத்தப்படாவிட்டால் நாடு பற்றி எரியும்

### ஜனாதிபதிக்கும் இதனைக் கூறி இருக்கிறேன் என்கிறார் றிஷாத்

மட்டக்களப்பு,ஏப்.1

முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற அட்டூழியங்களைக் கட்டுப்படுத்த முடியவிட்டால், நாடு இன்னும் 30, 40 வருடங்களுக்குப் பற்றி எரியும். இதனை நான் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர், பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்குச் சொல்லியிருக்கின்றேன்.

இவ்வாறு கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் அறைகூவல் விடுத்தார்.

மட்டக்களப்பு மீள்குடியேற்றக் கிராமமான உறுகாமத்தில் இடம்பெற்ற அபிவிருத்திப் பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும். தமிழ் மக்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்றிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ், முஸ்லிம் மக்களை ஒற்றுமைப்படுத்துகின்ற விடயத்திலே எங்களுடன் பேசவேண்டும். தமிழர்களும் முஸ்லிம்களும் ஒருமித்து இந்தத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்ற தருணம் இப்போது வந்துள்ளது.

தமிழ் பேசும் சமூகம் கிழக்கிலே ஒன்றுபட்டு வாழ்வதைப் போல வடக்கிலும் சகவாழ்வு வாழ வேண்டும். ஆனால், இந்த விடயத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய ஒத்துழைப்புப் போது மான தாக இல்லை. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு நாங்கள் எந்நேரமும் தயாராக இருக்கின்றோம். உங்களுடன் ஒன்றுசேர்ந்து தமிழ், முஸ்லிம் உறவுக்காகவும் உரிமைக்காகவும் குரல் கொடுக்க நாங்கள் திடசங்



கற்பம் பூண்டுள்ளோம்.

இனியும் நாங்கள் அர்த்தமில்லாமல் பிளவுபட்டு நிற்க முடியாது. தமிழ் பேசும் சமூகங்கள் பலவீனப்பட்டு அழிய முடியாது. நாம் இழப்பதற்கு இனி எதுவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எங்களோடு இது விடயமாகப் பேச முன் வரவேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமையாக வாழ வேண்டும். இதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். இந்த நாடு பிளவு படக்கூடாது என்பதிலே முஸ்லிம் சமூகம் மிகக் கவனமாக இருந்திருக்கின்றது.

கலகம் விளைவிப்பவர்களைக் கைது செய்யுங்கள். அவர்களை அடையாளம் காட்ட மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

புதுப்புது விளக்கங்களுடன் பொது பல சேனா என்றும், ஜாதிக ஹெல உறுமய என்றும் ராவய என்றும் சட்டரீதியற்ற பொலிஸ்காரர்கள் நாட்டைக் காக்கப் புறப்பட்டு முஸ்லிம்களுக்கு அநியாயமிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த அரசைப் பொறுத்த வரை நாங்கள் நேற்று அல்லது இன்று அரசுடன் சேர்ந்தவர்களல்ல.

ஆட்சி அமைப்பதற்குப் பெரும்பான்மை இல்லாமல் இவர்கள் தடுமாறிய பொழுது கைகொடுத்தவர்கள்தான் நாங்கள்.

இந்த நாட்டிலே சமாதானம் மலரவேண்டும் என்பதற்காகத்தான் நாம் அவ்வாறு செய்தோம். சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காகத் தான் நாம் மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கை கொடுத்தோம்.-என்றார். (ச-சி)

## நிறைவு பெற்றது தேசத்தின் மகுடம்



அம்பாறை,ஏப்.1

அம்பாறையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்று வந்த ஏழாவது தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவு பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிறைவு நாள் பிரதான வைபவத்தில் பிரதமர் டி. எம். ஜயரட்ண, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவு பெற்றது என்று பிரதமர் டி. எம். ஜயரட்ண உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

இந்தக் கண்காட்சி வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைய இருந்த போதிலும், பார்வையிட வரும் பொதுமக்களினதும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களினது நலன் கருதி ஒரு நாள் நீடிக்கப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை கண்காட்சி இடம் பெற்றது.

கண்காட்சியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் இலட்சக் கணக்கான பொதுமக்களும், மாணவர்களும் கண்காட்சியைப் பார்வையிட வருகை தந்திருந்தனர். சகல காட்சிக் கூடங்களிலும் இந்த முறை மும்மொழிகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், கண்காட்சியை பார்வையிட வருபவர்களுக்கு தகவல்களை வழங்கும் வகையில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இறுதிநாள் நிகழ்வில் கலந்து [illegible] பிரதமர் டி. எம். ஜயரட்ணவுக்கு அமைச்சர் [illegible] நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை கிடைக்கவில்லை எரிபொருள் மானியம்

### மீனவ சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.1

கடந்த மார்ச் மாதத்துக்கான எரிபொருள் மானியம் இதுவரை எந்தவொரு மீனவருக்கும் வழங்கப்படவில்லை என்று மீனவ சங்கங்கள் குற்றஞ் சுமத்தியுள்ளன.

எரிபொருள் மானியம் கிடைக்காமையினால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்று அகில இலங்கை பொது மீனவ சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே தெரிவித்தார்.

இந்த மானியம் வழங்கும் நடவடிக்கை போலியான ஒரு செயற்பாடாகும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, இந்த மானிய உதவிகள் தொடர்பான கூப்பன் அட்டை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இதுவரை வழங்கப்படவில்லை என்று கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டி ஆராச்சி தெரிவித்தார்.

அதனாலேயே கடந்த மார்ச் மாதத்துக்கான எரிபொருள் மானிய உதவிகளை வழங்க முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

கூப்பன் அட்டைகள் கிடைக்கப்பெற்றவுடன் எரிபொருள் மானியம் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## சாவகச்சேரி சந்திக்கு புதிய சுற்றுவட்டம்

தென்மராட்சி, ஏப்.1

சாவகச்சேரி வேம்படிச் சந்தியில் புதிய சுற்றுவட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

ஏ-9 வீதி அகலிப்புக்காக புனரமைக்கப்பட்ட பின்னர், சந்திப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுவட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

சந்தியிலிருந்து தனங்கிளப்பு வீதி, கச்சாய் வீதி, ஏ-9 வீதி ஆகியவை பிரிந்து செல்வதால் நீண்ட காலமாகச் சுற்றுவட்டமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

1975 ஆம் ஆண்டுவரை இந்த இடத்தில் பெரிய வேப்பமரம் காணப்பட்டதால் வேம்படிச் சந்தியென அழைக்கப்பட்டு வந்தது. 1975 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த இடத்தில் நிழற்குடை அமைக்கப்பட்டு இருந்தது.

கடந்த வருடம் ஏ-9 வீதி புனரமைப்புச் செய்யப்பட்ட வேளையில் சுற்றுவட்டம் அகற்றப்பட்டிருந்தது. தற்போது புதிய சுற்றுவட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. (ந-9)

## துப்புரவு எப்போது?

அளவெட்டி, ஏப். 1

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் தெல்லிப்பழை- கட்டுவன் வீதியோரம் அமைந்துள்ள பிரதான வடிகால் சிறிய பற்றைக் காடுகள், புற்கள், பாதீனியம் என்பவற்றால் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் வடிகாலின் நீர் வடிந்தோடும் வீதம் குறைந்துள்ளது. தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் இந்தப் பிரதான வடிகால் மூலமே வெளியேற்றப்படுகிறது. இந்த நிலையில் வடிகால்களை மூடி பற்றைகள் வளர்ந்துள்ளதால் நீர் வடிகாலில் தேங்கி நிற்கின்றது. இதனால் நுளம்புப் பெருக்கம் ஏற்படக்கூடிய ஏது நிலையும் காணப்படுகின்றது.

எனவே குறித்த வடிகாலைச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து துப்புரவு செய்து நீர் தேங்கி நிற்காது வழிந்தோடக்கூடிய ஏதுநிலையை உருவாக்க முன்வரவேண்டும் என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-36)



யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர்புனர்வாழ்வு நிறுவனத்தினால் வலுவிழந்த பயனாளி ஒருவரின் புனர்வாழ்வுக்கென கடந்த வெள்ளிக்கிழமை முச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. நிறுவனத் தலைவி திருமதி ஜெ.கணேசமூர்த்தி முச்சக்கர சைக்கிளை வழங்குகிறார். (135)

## நடனப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 'சமஸ்தலங்கா' நடனப் போட்டிகள் அண்மையில் மட்டக்களப்பு மகாஜன வித்தியாலயத்தில் நடைபெற்றன. தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் மத்தியில் நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் வலிகாமம் வலயத்திலிருந்து ஐந்து நிகழ்ச்சிகள் போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றின.

இந்தப் போட்டியில் விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து ஆண் மாணவர்களின் தாள நடனம் முதலாமிடத்தையும், மாணவிகளின் யதீஸ்வரம் நடனம் இரண்டாம் இடத்தையும், தனி நடனம் இரண்டாம் இடத்தையும் பெற்றன. உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் செம்பு நடனம் இரண்டாமிடத்தையும், பண்டத்தரிப்பு யசிந்தா வித்தியாலய மாணவர்களின் கோலாட்டம் நிகழ்ச்சி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (எ)

## துரையப்பா விளையாட்டரங்கு விரைவில் புனரமைக்கப்படும்

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கான நிதியினையும் மாநகரசபை ஒதுக்கீடு செய்துள்ளது. விரைவில் புனர்நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் மாநகர சபையில் நடைபெற்ற கூட்டத்தில் விளையாட்டரங்கைப் புனரமைப்பது தொடர்பான தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ந-17)

## 'பம்மிங்' வீதியால் பெண் படுகாயம்

வலி. வடக்கு, ஏப். 1

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்த பெண் வீதியின் ஏற்றம் இறக்கம் (பம்மிங்) காரணமாக மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டமையால் முகத்தில் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை புன்னாலைக் கட்டுவன் புத்தூர் வீதியில் இடம் பெற்றது.

ஆலயத்திற்குச் சென்றுவிட்டு உறவினருடைய மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்த வேளையில், நடைபெற்ற விபத்தில் காயத்துக்கு உள்ளாகினார். ஈவினையைச் சேர்ந்த ஜெயம் பாமா (வயது -45) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

புன்னாலைக்கட்டுவன் புத்தூர் வீதி மிகவும் மோசமான பம்மிங் வீதியாகக் காணப்படுகின்றது. அதனால் வாகனங்களைச் செலுத்துவதில் மிகவும் சிரமம் காணப்படுகின்ற போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-86)

## தோட்டத்தில் திருட்டு பறிபோனது பீற்றூட்

வலி. வடக்கு, ஏப்.1

அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் சுமார் இருநூறு கிலோவுக்கும் மேற்பட்ட பீற்றூட் கிழங்குகள் திருடர்களினால் இரவோடு இரவாக பிடுங்கிச் செல்லப்பட்ட சம்பவம் ஏழாலை மத்தியில் உள்ள தோட்டம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தோட்டத்தின் உரிமையாளரான புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த க.பகீரதன் என்பவாரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டத்தில் காணப்பட்ட பீற்றூட் கிழங்குகளை மிகவும் நிதானமாகத் தெரிந்தெடுத்துப் பிடுங்கிச்செல்லப்பட்டுள்ளதாகவும் இதனால் சுமார் இருபதாயிரம் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

## பால் விற்பனை நிலையம் இன்று திறந்து வைப்பு

வேலணை,ஏப்.1

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலணை வங்களாவடிச் சந்திக்கு அருகில் பால் விற்பனை நிலையம் ஒன்று இன்று காலை திறந்து வைக்கப்படுகின்றது.

இந்தப் பால் விற்பனை நிலையத்தை வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் திறந்து வைப்பார். நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-17)


## மரண அறிவித்தல்

## மோசஸ் அமலதாஸ்

(ஓய்வு பெற்ற வன பரிபாலன உத்தியோகத்தர்)



இல.309, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 35/2, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட மோசஸ் அமலதாஸ் 27.03.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி றெஜினாவின்(சந்திரா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுவக்கீன் மோசஸ்-மேரி யோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மோசஸ் எட்வேட் (அரியகுட்டி)-விக்ரோறியா பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நினோன் அனிஷியா (ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செறேனஸ் நிஷாந்தன்(ஆசிரியர், சென் பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிசிலியா, M.F.யோசேவ்(இளைப்பாறிய சிரேஸ்ட சாலைப் பரிசோதகர்), அலோசியஸ்(இளைப்பாறிய அதிபர்), யுஸ்ரினா(கிறேஸ்மணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், M.E. ஜோர்ஜ்(நொதேன் இன்டஸ்றீஸ்), அருளம்மா, சாமினி, ஆரோக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜேம்ஸ் செல்வகுமார்(முகாமையாளர், அப்பலோ ரயர் ஹவுஸ்-யாழ்ப்பாணம்), கிறிஷாந்தி(ஜீன்-கணக்குப்பகுதி, உதயன் பணிமனை ) ஆகியோரின் அன்பு மாமனும், கிறிஸ்ரியன், மொணிக்கா, அக்னெஸ், கொன்சி, றெஜினா, லூமினா, சகாயநாயகம், சகாயராணி(உதவிப்பதிவாளர்- கிழக்குப் பல்கலைக்கழகம்), சகாயமலர்(பவா), சகாயராஜா(ஆசிரியர்,சென் பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கமில் ஜோயல், சிமித் செனாறி, ஹரின் ஏட்றியன் ஆகியோரின் அன்புப் பேரனும், சியான்(மேற்பார்வையாளர்- யாழ். மாநகரசபை), ஜெகான் (டேவிற் பீரீஸ் மோட்டார் கம்பனி pvt. Ltd), டிஷான், சகானா, டிறோஷினி, நிலோஜன்(பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு மாமனும், கமலினி, அருட்செல்வன்(சம்பத் வங்கி- யாழ்ப்பாணம்), மயூரன், Dr.லூஷாந்தன், Dr. ஜிந்துஜன் ஆகியோரின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.04.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வினை தொடர்ந்து புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

35/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6910611
077 9133789

(C/8018)(8.7)

தகவல்:
குடும்பத்தினர்.



Reg.No.GL41

UNHCR The UN Refugee Agency

## INVITATION FOR BID
## SEWALANKA FOUNDATION
## KILINOCHCHI / MULLAITHIVU

**SEWALANKA FOUNDATION** is a National Non-Governmental Organization (NGO) which has been in existence for the last nineteen years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by internal conflict across the entire country, and generously funded by the **UNHCR.**

1. **Sealed Bids are invited for the following works from eligible and qualified bidders for the Construction of New Teacher's Quarters 64' x 26' below up to 15th of April 2013 at 2.30 p.m.** and will be **open on 15th of April 2013 at 2.45 p.m** in the District Office, No 75, Thirunagar Road, Kilinochchi. Late bids will be rejected. The bidders or their authorized representatives are invited to be present at the opening occasion.
2. Bidding will be conducted through Local Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered having registered office within territorial area of Puthukudiyiruppu, Mullaitivu in the field of Building Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 1 item 5 of the Bidding document. Additional details are provided in the bidding Data sheet (Section -02)
5. Interested bidders may obtain further information from **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi (Tel No: 021-2285082) or Post office Road, Mullaithivu (Tel 0212290024)** E-Mail to killinochi.finance@sewalanka.org and inspect the bidding documents at the same address on any working day from 9.00 hrs to 17.00 hrs on or before **12th of April 2013 at 5.00 p.m.**
6. Pre-bid Consultation : The firms those are interested for construction before to bid, a pre bid consultation will be given to them on 8th April 2013 from 2.00pm onwards regarding information on the requirements, specification, standards of the construction work
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Killinochchi.** from **2013.04.02 until 2013.04.12 from 9.00 hrs to 17.00 hrs** upon payment of non-refundable fees of **Rs. 2,000.00** for each bid. The method of payment should be by cash.
8. Prepared Bids adhering to all the conditions specified in the Bid Documents should be put into the tender box at **District Office, No 75, Thirunagar Road, Kilinochchi,** or sent by registered post addressed to: **The Project Manager, Sewalanka foundation, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi, Srilanka to receive on or before 15th of April 2013 at 2.30 pm. Tender code number must be mentioned in the top of the envelop.**
9. The validity should be offered for 60 days from the time of opening of bids and 180 days from the binding of contract agreement.

The bill of quantity envisaged in the projects advising to quote to the works as per the specifications on bid codes are as follows.

| Tender Code | Narration of the works | Total estimated amount in LKR | Required ICTAD Grade | Bid Bond in LKR |
|---|---|---|---|---|
| SLF/UNHCR/ MULLAI/P-I/01 | Construction of New Teachers Quarters 64' x 26' at puthukudi--yiruppu in mullaitivu District. | 6.1 Mn | C7 or above | 61,000/- |

Any expenses arising on the preparation of bid document and submission should not be reimbursed.

**Project Manager,**
**SEWALANKA FOUNDATION,**
**District Office,**
**No-75, Thirunagar Road,**
**Kilinochchi.**

(26266)(10,6,7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஏப்.1

சாவகச்சேரி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சக்தியம்மன் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றது.

கழக அங்கத்தவர் லயன் குணரத்தினம் பிரணவராஜாவின் பிறந்த தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவப் பரிசோதனை முகாமில் லயன் மருத்துவர் என்.சக்திராஜ், லயன் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் ஆகியோரால் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

மாணவர்களுக்கான கண், காது, பல் ஆகிய பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. பரிசோதனை முகாமில் பெருமளவு பொதுமக்கள் பங்கு பற்றி இரத்த அழுத்தம், நீரிழிவு, கண், தோல் மற்றும் பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகளை மேற்கொண்டதாக கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தெரிவித்தார்.

(ந-9)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
04-05-1962

மறைவு
02-03-2013



### தயாநிதி சேகர்

எமது குடும்ப விளக்கின் மரணச்செய்தி கேட்ட உடன் நேரிலும் தொலைபேசியிலும் (சரீரத்தாலும்) அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீரஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது குடும்ப விளக்கின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பண்டதை,
உடுப்பிட்டி.

(35315)(க.6)

குடும்பத்தினர்.

## CAR SALE

NISSHAN SUNNY N-16 SUPER SALL-OONA, SILVAR COLOR JJ-XXXX MANUAL GEAR T.P:- 0774521392

## விற்பனைக்கு

45 நாள் ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0771041736, 0774589670

## சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்துக்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும்.
ஒரு ஸ்குயர் 7000/= மட்டும்
தொடர்பு:- 0778167864

## மரண அறிவித்தல்

### திருமதி சௌந்தரநாயகி கிருஷ்ணபிள்ளை

(ஸ்ரீமுருகன் கிறைண்டிங் மில் கிளிநொச்சி)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரம், மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சௌந்தரநாயகி கிருஷ்ணபிள்ளை 30-03-2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் (இளைப்பாறிய அதிபர் -புங்குடுதீவு கமலாம்பிகை வி.)- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெரியதம்பி கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், சௌந்தர்ராஜன் (நீலவாணி என்டர் பிறைஸ் சுவிஸ்), சசிமாலா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), சிறீகரன் (சுவிஸ்), உதயராணி (நீலவாணி சில்க் ஹவுஸ்-சுவிஸ்), விஜயகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சிவகாமசுந்தரி, சாரதாஅம்பாள், சிவகுருநாதன், சாவித்திரிதேவி, சிவானந்தவள்ளி, சகுந்தலாதேவி (பிரான்ஸ்), சதாசிவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தில்லைச்சொரூபி, விக்கினேஸ்வரன், ரேவதி, சுபா, ராசன் (அம்பாள்), அனோஜா ஆகியோரின் பாசமிகு மாமியும், கமலேஸ்வரி, அருளம்பலம் (அம்பலவாணர்), நெல்லைநாதன் (கனடா), அன்னபூரணம் (பிரான்ஸ்), நடராசா, உலகேஸ்வரி, இராஜேந்திரம், பத்மநாதன், காலஞ்சென்ற சிவராசலிங்கம் மற்றும் மகாலெட்சுமி, விக்கினேஸ்வரலிங்கம், தவராஜா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கீர்த்தனா, அனிதா, அகர்ஷன், ஜனனி, ஆரபி, மிருசா, பிரணவி, கஸ்தூரி, கார்த்திகன், கீர்த்திகன், கிஸ்ணவி, கார்மிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 391, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரின் இறுதிக்கிரியைகள் 02.04.2013 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: பிள்ளைகள் (8021)(23-16..)

ராசன்- (சுவிட்சர்லாந்து) 41765859948, மாலா - (சுவிட்சர்லாந்து) 41319219849,
பிரபா --(சுவிட்சர்லாந்து) 41319726803, சிறி- (சுவிட்சர்லாந்து) 41319110047,
விஜி, ராணி - (பிரான்ஸ்) 33160063992, 33651064176

## மரண அறிவித்தல்

### கந்தையா பரமேஸ்வரன்

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை)



வீமன் காமம் வடக்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, பழைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமேஸ்வரன் நேற்று(31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், நல்லதம்பி, தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா, இராசையா மற்றும் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறிதரன், சிறிரஞ்சினி, சிறிவதனி, ரசீதரன், ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனும், மாலினி, நடேசபிள்ளை, சிவகுமார், ஜெகதாம்பாள், கடம்பேஸ்வரன் ஆகியோரின் சிறியதந்தையாரும், ராகுலன், கோகுலன், ஜெயகுலன், சிந்துஜா, ஜதூசன், ஜதீசன், மதுரிகா, அஜந்தா, ஜீத்தா, பிரசாந், சஜித்தன், அஜித்தா, சதீஷன், மதுமிதா, மதுஷா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை மு.ப. 11.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டைஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழையவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.(நாச்சிமார் கோயிலடி)
077 9653539 077 6510402

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினம்மா நீக்கிலஸ் (நேசமலர்)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல.06, ஓடக்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினம்மா நீக்கிலஸ் (நேசமலர்) நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு - அக்கினஸ் தம்பதியரின் அன்பு மகளும் எல்.சி.நீக்கிலஸ் (பப்பா) அவர்களின் அன்பு மனைவியும், லெஸ்லி ஜோர்ஜ் (சூரியகுமார், பொது வைத்தியசாலை, திருகோணமலை), லெஸ்லி சார்ல்ஸ் (பவா-கனடா), மாலினி (பிரான்ஸ்), றோகினி (கியூடெக் கரித்தாஸ், யாழ்ப்பாணம்), லெஸ்லி போல் (செல்லக்குமார், கனடா), ஜோதினி B.A. (கனடா) லெஸ்லி இம்மானுவேல் (ஜெயக்குமார் - கனடா), திரேசினி (சுவிஸ்), அருட்தந்தை லெஸ்லி அன்ரனி ஆகியோரின் பாசமிகு தாயும் நன்சி (சமுர்த்தி முகாமையாளர், திருகோணமலை), ஜெயமணி (கனடா), பீலிக்ஸ் (பிரான்ஸ்), ஜெபரட்ணம் (அஞ்சல் தலைமையகம், கொழும்பு), பானு (கனடா), ஏணஸ்ற் (பாபு- பொறியியலாளர், கனடா), சீபா (கனடா), பிறிட்டோ (பிறேமன், சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் இம்மானுவேல் (துரைசிங்கபாலா, இளைப்பாறிய லிகிதர், நாவாந்துறை), காலஞ்சென்றவர்களான ஜெராட் (தனம்), நீக்கிலஸ் (ஜெயபாலன்) மற்றும் அருட்சகோதரி நீக்கிலா (ஜெயமணி), திருமதி மேரிஹெலன் அலோசியஸ் (ஜசிந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (02.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எல்.சி. நீக்கிலஸ் (கணவர்)
தொ.பே. 021 222 7032,
021 222 8612

இல.06, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(36544)(6-16)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 720 /= Germany 740 /= France 815 /= Denmark 775 /= Netherland 825 /=
- மருந்துப்பொருட்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- உங்கள் வீடுகளிற்கு வந்து பொருட்களை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் விசேட சேவை.
- குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

15 வருட கால அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த, சோனியா, சுவாமி மூவருக்கும் இறுதிச் சடங்கு

## காவிரி நதிக்கரையில்



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோரின் படங்களுக்கு காவிரிநதிக் கரையில் தமிழீழ ஆதரவு மாணவர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் மாலை போட்டு திதி கொடுக்கும் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

காவிரிக் கரையில் ஒன்று திரண்ட மாணவர்கள் மூவ ரின் படங்களுக்கு பூ மாலை போட்டு, வாழை இலையில் தேங்காய், வாழைப்பழம், பொட்டுக் கடலையுடன் படையல் வைத்தனர்.

தொடர்ந்து, அர்ச்சகர் வேடத்தில் 2 மாணவர்கள் ஓமக் குண்டத்தை உருவாக்கி வேதம் ஓதினார்கள்.

சோனியா, சுப்பிரமணிய சுவாமி, ராஜபக்ஷவின் உறவினர்கள்போல மாணவர்களே வேடம் தரித்து மந்திரம் ஓதி, ஈமச்சடங்கு செய்து, ஒருவருக்கொருவர் கட்டிப்பிடித்து கதறி அழுதனர். பின்பு அவர்கள் நெருப்பு குண்டத்தில் இருந்த அஸ்தியை காவிரி ஆற்றில் கரைத்து கைக்குலுக்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

இதுகுறித்து மாணவர்கள் கூறுகையில்;

''மூன்று பேரும் ஒரு இனத்தையே கருவறுத்தவர்கள். அவர்களுக்கு பாவ மன்னிப்பே கிடையாது. தன் கணவனை இழந்ததற்காக ஒரு இனத்தையே அழித்த சோனியா, சர்வதேச தரகர் சுப்பிரமணிய சுவாமி, வில்லன் ராஜபக்ஷ ஆகிய மூன்று பேரையும் சர்வதேச நீதி மன்றத்தில் நிறுத்தி தண்டனை வாங்கித் தரும் வரை தமிழீழ மாணவர்கள் கூட்டமைப்பு ஓயாது'' - என்றனர். (வ)

# கல்லூரிகளை திறக்குமாறு மத்திய அரசுக்கு கோரிக்கை

## பரீட்சையின் பின் மே 14இல் போராட்டம் தீவிரமாகும் என்கிறது மாணவர் கூட்டமைப்பு

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கல்லூரிகளை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று மாணவர் கள் கூட்டமைப்பினர், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாரி மைந்தன் மேலும் தெரிவித்ததா வது:-

''போராட்டங்களால், மாணவர்களின் படிப்பு, ஒரு சதவீதம் கூட பாதிக்கக் கூடாது. மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அமைதியான முறையில் எங்களின் போராட்டத்தை தொடருவோம். 1976 ஆம் ஆண்டு, மே 14 ஆம் திகதி செல்வா தலைமையில், தனி ஈழம் அமைய வேண் டும் என வலியுறுத்தி, வட்டு கோட்டை தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. கல்லூரிப் பரீட்சைகள் முடிவடைந்த பின் அந்த சிறப்புமிக்க நாளிலிருந்து, எங்கள் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் - என்றார்.

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஜோ பிட்டோ தெரிவித்ததாவது:-

கல்லூரிகளை திறக்க வேண்டும் என்பதே, ஒட்டு மொத்த மாணவர்களின் கோரிக்கையாக உள்ளது. கடந்த, 20 தினங்களாக மாணவர்கள் அறவழியில் போராடி வருகின்றனர். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, சட்ட சபையில் இலங்கைக்கு எதிராக சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுபோன்று நாடாளுமன்றத்திலும், தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். எங்களின் அறவழிப் போராட்டம் படிப்புக்கும், பொது மக்களுக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் நூதன முறையில் தொடரும் - என்றார்.

தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் இளைய ராஜா,

கல்லூரிகளை அரசு முடக்கக் கூடாது; எங்களின் போராட்டத்தால், மாணவர்களின் கல்வியும், பரீட்சையும் பாதிக்காது. மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், போராட்டங்களைத் தொடருவோம் எனத் தெரிவித்தார்.

ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் கணேசன், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசு உடனே கல்லூரிகளை திறக்க வேண்டும். எங்கள் போராட்டம் மாணவர்களைப் பதிக்காதுஎன்று தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்; அரசு பரிசீலிக்காது நிராகரிப்பு

## பா.ஜ.க.கண்டனம்

இலங்கைக்கு எதிரான தமிழக சட்டமன்ற தீர்மானத்தை மத்திய அரசு பரிசீலிக்காமல் நிராகரித்ததற்கு பாரதீய ஜனதாக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவரும், தேசிய செயற்குழு உறுப்பினருமான இல.கணேசன் நேற்று முன் தினம் சேலத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்தார். இது தெடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழக சட்டசபையில் இலங்கைக்கு எதிராக முதல்வர் கொண்டு வந்த 3 தீர்மானத்தை மத்திய அரசு பரிசீலனை செய்யாமல் நிராகரித்துள்ளது. இதனை வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் அறிவித்துள்ளார். சட்ட பேரவை ஒன்றில் நிறைவேற்றப்படும் தீர்மானம், அந்த மாநில மக்களின் எண்ணம். அதனை பெரும்பான்மை காங்கிரஸ் அரசு நிராகரிக்கும் என்பது தெரிந்த விடயம்தான். இதுவரையும் [illegible] ஒரு மாநில அரசு மட்டும் தானே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது ஜனதாக் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது-என்றார். (வ)


## துயர் பகிர்கின்றோம்

எமது நண்பன்
அ.செ.நிஷாந்தனின்
பாசமிகு தந்தை
மோசஸ் அமலதாஸ்
அவர்களின் மறைவினால்
துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



யாழ். மரியன்னை பேராலயம். (8022) (23- 16..)
நண்பர்கள் முன்னாள் இளைஞர் உருவாக்கல் குழுமம்.



## மரண அறிவித்தல்



### சுப்பன் சாந்தலிங்கம்

(ஓய்வூதியர்- யாழ். மாநகரசபை)

சண்டிலிப்பாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் சாந்தலிங்கம் நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராஜகுமாரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிர்மலன் மற்றும் சத்தியசீலன், நற்குணசீலன், கோகுலசீலன், சண்முகப்பிரியா, குகசீலன், குணசீலன் (டோகா), காலஞ்சென்ற ஜிந்தசீலன் மற்றும் கிருஷ்ணசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளா, சசிகலா, ஸ்ரீகரன், நந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சண்டிலிப்பாய் கிழக்கு. (35542)






ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு :
GATEWAY
LANGUAGE & ICT CENTRE KILINOCHCHI
Karadippoku Junction, Kilinochchi,
Phone : 021 228 0065 / 66



## மரண அறிவித்தல்கள்

### திருமதி திரேசம்மா ஞானமுத்து



பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, பழைய பொலிஸ் நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேம்மா ஞானமுத்து நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான மத்தேயு விக்ரோறியா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஞானமுத்துவின் அன்பு மனைவியும் அருளம்மா, அப்பலோனிக்கா, சாமிநாதன், றோசம்மா, அன்னம்மா, மேரிபுஸ்பம், காலஞ்சென்ற பாக்கியராசா, மைக்கல், அமிர்தநாயகம் (சுட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரியமலர், பேபிராசா (ஜேர்மனி), சாந்தினியம்மா, காலஞ்சென்ற இயேசுராசா, மாக்கிறேட்றாணி, ஜெலேனம்மா (சந்திரா), கிறிஸ்துராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சின்னத்துரை, புனிதம் (ஜேர்மனி), மரியதாஸ், அலெக்சாண்டர், டெனிஸ்றோக் (குலம்), சறோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணியளவில் பூதவுடல் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக கோப்பாய் புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி, கோப்பாய் தெற்கு. (35547) (23- 16..)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

### வல்லிபுரம் செல்வராசா



புலோலி தெற்கு, உபய கதிர்காமத்தை பிறப்பிடமாகவும் புலோலி தெற்கு, சாரையடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்வராசா நேற்று (31.03.2013) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வேந்திராவின் அன்புக் கணவரும் வாசுகி, வாகீசன், காவேரி, மாதினி, பானுகோபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நக்கீரன், தமிழினியன் ஆகியோரின் மாமனும் காவியாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி, புலோலி.
0773623714, 021 226 3633 (35517) (23- 16..)
தகவல்: வாகீசன் (மகன்)



## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை
ஆதாரவைத்திய சாலை
நலன்புரி சங்கத்தின்
நீண்டகால
உறுப்பினராகத்
திகழ்ந்த
வல்லிபுரம்
செல்வராசன்
அவர்களின் மறைவுச்
செய்தி அறிந்து மிகவும்
கவலை
அடைகின்றோம்.
அன்னாரது பிரிவால்
துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மந்திகை நோயாளர் நலன்புரி சங்கம்.
ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்களுக்கு இந்தியா பாதுகாப்பு

## ஐ.பி.எல். தொடர்பில் கொழும்பிடம் உத்தரவாதம் அளித்தது புதுடில்லி

இந்தியாவில் நடைபெற வுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகள் வழங் கப்படும் என இந்திய அரசு இலங்கையிடம் உறுதிய ளித்துள்ளது.

தமது கிரிக்கெட் வீரர் களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கா விட்டால் அவர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பது குறித்து மீள்பரி சீலிக்க வேண்டிவரும் என இலங்கை அரசு இந்தியா விடம் முன்னதாகத் தெரி வித்திருந்தது.

இந்நிலையிலேயே இலங்கை வீரர்களின் பாது காப்புக்கு உத்தரவாதமளித் துள்ள டில்லி இதனை இலங் கையிடம் இராஜதந்திர ரீதி யில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது எனவும் தெரியவருகின்றது.

இலங்கை வீரர்கள் பங்கேற்றால் சென்னையில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்த அனுமதியளிக்கப்படமாட் டாது ணத் தெரிவித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப் பியதால் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற் பதில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

தமிழக முதல்வரின் இந் நடவடிக்கைக்கு கடும் ஆட் சேபனையை வெளியிட்ட இலங்கை, தமது வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் கலந்துகொள்ளும் பட்சத்தில் உரிய பாதுகாப்பை வழங் குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்விடயம் குறித்து பரிசீலித்த இந்திய மத்திய அரசு, சென்னையைத் தவிர இதர பிரதேசங்களில் நடை பெறும் போட்டிகளின்போது இலங்கை வீரர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க நடவடி க்கை எடுத்துள்ளது.

# மாநகரசபை ஊழியர் நால்வர் கொட்டடி வாள் வெட்டில் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ். கொட்டடிப் பகுதி யில் இருதரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டில் முடிந்தது. இதனால் யாழ். மாநகர சபை ஊழியர்கள் நான்கு பேர் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது. இதில் நாவற் குழி 300 வீட்டுத் திட்டத் தைச் சேர்ந்த கே.குலநாதன் (வயது-28), குருநகரைச் சேர்ந்தவர்களான எஸ். ஜோன்சன் (வயது-32), எஸ்.சூசை (வயது-22) மற் றும் குருநகர் 5 மாடி வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிந் தாத்துரை (வயது-32) ஆகி யோரே காயமடைந்தவர்களாவர்.

யாழ். மாநகர சுகாதாரத் துறை ஊழியர்களான குறித்த நான்கு பேரும் பணி நிமித்தம் வீதியால் சென்றுகொண்டி ருந்தனர். அப்போது ஒரு குழுவினர் வீதியில் நின்று ஆடிக்கொண்டிருந்தனர். அதனூடாகச் சென்றபோதே மாநகரசபை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு ள்ளது.

**பணி நிமித்தம் வீதியால் சென்று கொண்டிருந்த போதே இத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.**

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப் பட வில்லை. (ங-4)

# தாக்குதலில் ஈடுபட்டோரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## அரசியல் கட்சிகள் கூட்டாகக் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன்நிறுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பிரபா கணேசன், ஜன நாயக மக்கள் முன்னணியின் உயர்மட்டத் தலைவர்களான சு. பாஸ்கரா, சண் குகவரதன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ் வரன் மற்றும் சுரேஷ் பிரேமச் சந்திரன் ஆகியோர் தமது கண் டனத்தை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஜனநாய கத்தை குழி தோண்டிப் புதைக்கும் ஒரு செயல் என்று கொழும்பு மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இலங்கையின் தேசியக் கொடிகளை ஏந்தியவாறும், பொலிஸாரின் பாதுகாப்புட னுமேயே இந்தத் தாக்குதல் இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தசெயலானது தேசியக் கொடியை கொச்சைப்படுத் தும் முயற்சியாகத் தோன்று கின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் உப செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரு மான சண் குகவரதன் வெளி யிட்டுள்ள கண்டன அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரி வித்திருப்பதாவது:-

கிளிநொச்சியில் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம் இலங்கை அரசின் உண்மையான முகம் வெளிக் காட்டப்பட்டுள்ளது. அரசின் அராஜக நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தெல்லிப்பழையில் ஆரம் பமான இந்த ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் இன்று கிளிநொச்சி வரை நீண்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் சர்வதேசம் தனது கவனத்தைச் செலுத்த வேண் டும் - என்று அதில்தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-400)

# பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ். போதனா வைத்திய சாலையில் பாதுகாப்பு உத்தி யோகத்தராகப் பணிபுரியும் ஒருவரை இனந்தெரியாத இருவர் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்ற இந்தச் சம்ப வத்தில் அரியாலையைச் சேர்ந்த பி.சசிகுமார் (வயது-19) என்பவரே தாக்குதலுக்குள் ளாகி சிறுகாயமடைந்தார்.

பார்வையாளர் நேரத்தில் நோயாளி ஒருவரை வைத்திய சாலைக்கு இரத்தவங்கிக்கு முன்பாக உள்ள பாதையால் சிலர் கொண்டுசெல்ல முயன் றதாகவும், அப்போது அந்த வழியூடாகப் போக முடியாது என்று தான் மறித்ததாகவும் அதன் பின்னரே மோட்டார் சைக்கிளில் அந்த இடத்துக்கு வந்த இனந்தெரியாத இருவர் தன்மீது தாக்குதல் நடத்திய தாகவும் குறித்த உத்தியோ கத்தர் தெரிவித்தார். இது தொடர்பில் யாழ். பொலி ஸிலும் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

(ங-4)

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக மருத்துவர்கள் உண்ணாவிரதம்

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மருத்துவர்கள், சென்னை வள்ளுவர் கோட்ட த்தில் நேற்று உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் ஈழத் தமிழர் களுக்கு எந்தவிதத் தீர்வையும் முன்வைக்காததால், அதை எதிர்க்கிறோம். இலங்கையில் நடைபெற்றது வெறும் போர்க் குற்றமோ, மனித உரிமை மீறலோ மட்டுமல்ல அது திட்டமிட்ட இனப்படுகொலை.

தமிழக மாணவர்கள் மற்றும் மக்களின் உணர்வு களைப் புரிந்து கொண்டு தமி ழக அரசு சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானங் களை கூட்டாட்சி தத்துவத்தை மதித்து மத்திய அரசு நாடாளு மன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை அரசின்துணைத் தூதரகத்தை தமிழ் மண்ணில் இருந்தும், இந்தியாவில் இருந் தும் வெளியேற்ற வேண்டும். இலங்கை உடனான அனை த்து அரச உறவுகளையும் இந்திய அரசு துண்டிக்க வேண்டும். தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, இலங்கை அரசின் மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

உலகத் தமிழர்களின் பாது காப்பை உறுதி செய்ய தமிழ் நாடு அரசு சார்பாக வெளியு றவுத்துறையை உருவாக்க வேண்டும். ஆசிய நாடுகள் எதுவும் சர்வதேச விசாரணைக் குழுவில் இடம்பெறக்கூடாது. தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது உடன டியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். கச்சதீவை மீட்க வேண்டும். ஈழத்தமிழர் பிரச் சினைக்கு இந்திய அரசு தீர்வு காணாவிட்டால் தமிழகத்தில் இருந்து எந்த வரியையும் செலுத்தமாட்டோம். இவ்வா றான கோரிக்கைகளை உண்ணா விரதத்தில் பங்கேற்ற வர்கள் முன் வைத்தனர். (வ)

# ஜப்பான், தென்கொரியாவிலும் புலம்பெயர் தமிழர் போராட்டம்

ரோக்கியோ, ஏப்.1

இலங்கையில் இடம் பெற்ற இனப் படுகொலைக்கு நேர்மையான முறையில் ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்து நேற்று முன்தினம் ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகளிலும் ஈழத் தமிழர்கள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் பரவலாக இடம்பெற்றுவரும் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கக்கூடியதாக ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் புலம்பெயர்ந்து வதியும் ஈழத் தமிழர்கள் ஒன்றுகூடி அந் தந்த நாட்டில் உள்ள இந்தி யத் துணைத் தூதரகங்க ளுக்கு முன்பாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்திய தமிழக சட்ட சபையில் எடுக்கப்பட்ட தீர் மானத்தை மத்திய அரசு உடனே ஆவன செய்ய வேண் டும். தனிஈழம்குறித்து இலங்கைத் தமிழர் களுக்கு பொது வாக் கெடுப்பு நடத் தப் படவேண்டும் உள்ளிட்ட கோரிக் கைகளை போரா ட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முன்வைத் தனர்.

இந்தப் போராட் டத்தில் இரு நாடு களிலும் புலம் பெயர் ந்து வாழும் விஞ் ஞானிகள், வைத் தியர்கள் உட்பட பல்வேறு மட்டங் களைச் சேர்ந்த புலம் பெயர் தமிழர்கள் பங்குபற்றி இருந் தனர். (ஒ-14)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சுரேந்திரநாதன்

(சாமி அன்சன்ஸ் உரிமையாளர்
கைதடி நவீல்ட் பாடசாலை பழைய மாணவர்)



யாழ்ப்பாணம் 2 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சுரேந்திரநாதன் நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கன்னிகா பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சதுஜா, பிந்துஜா, கேஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1/9, 2 ஆம் ஒழுங்கை
பலாலி வீதி, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் கணேசரத்தினம் (பட்டு)



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீரவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் கணேசரத்தினம் (பட்டு) நேற்று (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கிருஷ்ணர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் வேணுஜாவின் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் இந்திரவதி, இந்திராதேவி, தவரத்தினம், நவரத்தினம், குகரத்தினம், இரஞ்சனா தேவி (சுவிஸ்), சிவதேவி, காலஞ்சென்ற தர்மரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகசபாபதி, இராசரத்தினம், ராணி, சுசிலா, வசந்தி, பாலசுப்பிர மணியம், ஜெயசீவரத்தினம், பொன்ராசா, ரவிச்சந் திரன், நாகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்து னரும் தவமணி, றஞ்சினி, அந்தோனிப்பிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் கலைச்செல்வி, கலைமகள் தவயோகராசா பிரசாந்த், துனிஸ்ரா, சுதர் சினி, சியாமினி, இராசகுபேரன், தஜீபா, தர்வினன், அனோஜா, பிரீதி, வினோதா, விதுஸா, டிலக்சனா, ரஞ்சனா, சுபா, ராஜன், ராஜா, நிசாந்தன், காலஞ் சென்ற பிரதாபன் ஆகியோரின் மாமனும் சியாமனா (டென்மார்க்), சின்ராசா (பிரான்ஸ்), துசி (கனடா), ஜெஜினா (பிரான்ஸ்), சியாளன் (பிரான்ஸ்), தாட்சாயினி, செல்வராசா, விஜி ஆகியோரின் சிறிய தந்தையும் பார்த்தீபன், சாரங்கன், சிந்துஜா, திசாஜினி, தரணிகா ஆகி யோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

([illegible] சனசமூக நிலையம் அருகில்)
[illegible], நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய கரம் சம்பியனானது மான்ஸ்

வலி.வடக்கு, ஏப்ரல் 31

**வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை அணிகளுக்கு இடையே மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி உள்ளக மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான கரம் சுற்றுப் போட்டி ஆட்டங்களில் 15 வயது, 19 வயதுப் பிரிவுகளில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அணிகள் சம்பியனாகிச் சாதனை படைத்துள்ளன.**

## 15 வயதுப் பிரிவில்......





15 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டங்களில் முதல் ஆட்டத்தில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.கீர்த்தனாவும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச்சேர்ந்த ஜே.ஜெனிஸ்ராவும் மோதிக் கொண்டார்கள்.

இதில்ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜெனிஸ்ரா முதல் சுற்றில் 4 புள்ளிகளைப் பெற்றார். ஆயினும் அடுத்த நான்கு சுற்றுக்களிலும் எழுச்சி கண்ட உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த கே.கீர்த்தனா முறையே 6, 7, 5, 4 என்று புள்ளிகளைக் குவித்து இறுதியில் 22 : 4 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த வி.டிலக்சியும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த யு.டிலக்சனாவும் மோதிக் கொண்டார்கள்.


ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த டிலக்சி முதல் இரண்டு சுற்றுக்களிலும் முறையே 8, 9 புள்ளிகளைப் பெற்று 17:00 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

அடுத்து இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எ.டிசானுகா- சி.சிந்துஜா இணை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த ஜெ.திலக்ஷனா- ச.நிலக்ஷனா இணையுடன் மோதிக் கொண்டாகள்.

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த திலக்ஷனா- நிலக்ஷனா இணை முதல் மூன்று சுற்றுக்களிலும் முறையே 5,5,4 புள்ளிகளைப் பெற்று 14:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இறுதியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலம் 2:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று வலயச்சம்பியனாகியது. (ங-86)

## 19 வயதுப் பிரிவில்......





19 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியிலும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் இடம் பெற்ற ஒற்றையர் ஆட்டங்களில் முதல் ஆட்டத்தில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.அசம்ராவும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எ.கோபிகாவும் மோதிக் கொண்டார்கள்.

இதில் ஐந்து சுற்றுக்களிலும் சிறப்பாக ஆடிய, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த வி.அசம்ரா 28:00 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ரெபேக்கா ரூபகாவும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எ.சுகன்யாவும் மோதிக் கொண்டார்கள்.

இதில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ரெபேக்கா ரூபகா முதலாம், மூன்றாம் சுற்றுக்களின் தலா 4 என்ற புள்ளிகளைப் பெற்றார் இரண்டாம் சுற்றில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுகன்யா 7 புள்ளிகளைப் பெற்றார். இறுதியில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் எஸ்.[illegible] 8:[illegible] என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

அடுத்து இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த என்.சுலக்சனா-கே.கௌபிகா இணை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த அ.சங்கீதா-ச.பிரியா இணையுடன் மோதிக்கொண்டார்கள்.

இதில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சோந்த சங்கீதா -பிரியா இணை 22: 00 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டி நிறைவில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலம் 2:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று, வலயச்சம்பியனானது. (ங-86)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் வலிகாம ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7.30 மணி
(வலிகாமம் பிரிவு)

பண்டத்தரிப்பு சாந்தை வி.க. எதிர் புதுமடம் வைகரை வி.க.

★ ★ ★

பருத்திதுறைஉதைபந்தாட்டலீக்கன் அனுதியுடன் நக்கிரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ளஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப3.30 மணி

றேஞ்சர்ஸ்'ஏ' அணி எதிர் வல்வை 'பி' அணி

பி.ப 4.30 மணி

பருத்தித்துறை ஐக்கியம் வி.க எதிர் விண்மீன்' வி.க 'பி' அணி

★ ★ ★

தெல்லிப்பழை நாமகள் சனசமூகநிலையம் விளையாட்டுக்கழகத்தின், 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மின்னொளியில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

இரவு 7மணி

குப்பிளான் விக்கினேஸ்வரா அணி எதிர் அளவெட்டி ஏசியன் அணி

இரவு 8.30 மணி

உடுவில் சென். மேரிஸ் வி.க எதிர்அளவெட்டி இளம் புயல் வி.க (ங-23-13-288)

## வேலணை பிரதேச செயலக மெய்வன்மை வியாழனன்று

யாழ்ப்பாணம்.ஏப்ரல்1

வேலணை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வன்மை போட்டி எதிர் வரும் வியாழக்கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டினும், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் சிவராஜாவும், யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது இடைவேளை நிகழ்வாக வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றும் இடம் பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து உதைபந்தாட்ட இறுதியாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது

(ங-23)

## சிநேகபூர்வ கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம் ஏப்ரல்1

டி.எவ்.சி.சி. வங்கி, யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் ஆகியவற்றின் எற்பாட்டில் டி.எவ்.சி.சி வங்கியின் கூடைப்பந்தாட்ட அணிக்கும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கூடைப்பந்தாட்ட போட்டி யாழ்.மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நாளைமறுதினம் புதன்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ளது. (ங-23)



மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 'வனிதா வாசன' வெற்றிக்கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட இராமநாதன் கல்லூரி அணித் தலைவியிடம் பிரதமவிருந்தினரும், சிறப்புவிருந்தினரும் இணைந்துவெற்றிக் கிண்ணத்தை வழங்கினர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதறினார் சந்திமால்

இலங்கை '20/20' அணியின் தலைவர் டினேஷ் சந்திமால் ஐ.பி.எல். வாய்ப்பை நிராகரித்துள்ளார். மேலதிக பயிற்சிகளைப் பெற விரும்பியதன் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

இலங்கையின்'20/20' அணியின் தலைவராக அண்மையில் நியமிக்கப்பட்ட டினேஷ் சந்திமால், நேற்று தனது முதலாவது '20/20' போட்டியில் பங்குகொண்டார்.

இந்த நிலையில் காயமடைந்துள்ள டெல்லி டேர் டெவில்ஸ் அணி வீரர் கெவின் பீற்றர்சனுக்குப் பதிலாக டினேஷ் சந்திமாலை அந்த அணி அணுகியதாகவும் எனினும் அந்த வாய்ப்பை டினேஷ் சந்திமால் நிராகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்காக அடுத்துவரும் 2 மாதங்களும் கடுமையான பயிற்சிகளில் சந்திமால் ஈடுபடவுள்ளார். இலங்கையின் '20/20' அணியின் தலைவராகவும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி அணிகளின் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஆங்கில மொழி மற்றும் ஊடகக் கையாளுகை தொடர்பான பயிற்சிகளையும் அவர் பெறவுள்ளார். இவற்றின் காரணமாகவே சந்திமால் ஐ.பி.எல். வாய்ப்பை உதறியுள்ளார்.

இந்த வருடம் ஐ.பி.எல் ஏலம் இடம்பெறறபோது டினேஷ் சந்திமால் 100,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விடப்பட்டபோதிலும் அவர் விலை போகவில்லை என்பது குறிப்பிடத்தக்து. (ந)

# சாதிப்போம்



''ஆறாவது ஐ.பி.எல்., தொடரில், பந்துவீச்சு ஆலோசகராக சாதிக்க முயற்சிப்பேன்,'' என்று கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் வாசிம் அக்ரம் பணியாற்றி வந்தார்.

அவர், தனது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்பியதால், அந்தப் பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து கொல்கத்தா

அணிக்கு ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீ, புதிய பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இதனையடுத்து ஏப்ரல் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 6 ஆவது ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணியின் வீரராக மட்டுமல்லாமல், பந்துவீச்சு ஆலோசகராகவும் செயல்பட உள்ளார் பிரட்லீ.

இதுகுறித்து பிரட் லீ கூறியதாவது

''கொல்கத்தா அணியின் பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டதன் மூலம் பெருமை அடைகிறேன்.

இந்த முறை வீரராக மட்டுமல்லாமல், பந்துவீச்சு ஆலோசகராகவும் செயல்பட இருப்பது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனை கூடுதல் சுமையாக கருதவில்லை. இந்தப் புதிய பொறுப்பில் சிறப்பாக செயற்பட முயற்சிப்பேன்.

பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்த பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம், சிறந்த வீரர். அவரது இடத்தை நிரப்புவது கடினம்.

அவர், தனது குடும்பத்தினருடன் நேரம் செலவழிக்க விரும்புவது சிறந்த முடிவு. கடந்த தொடர்களில் அவர், இளம் வீரர்களுக்கு பந்துவீச்சு குறித்து நிறைய ஆலோசனைகளை வழங்கினார்.

கொல்கத்தா அணியின் பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. குறிப்பாக சகல துறை வீரர் கலிஸ் இருப்பது மிகப் பெரிய பலம். இவர், பந்துவீச்சாளராக மட்டுமல்லாமல் துடுப்பாட்டத்திலும் சிறப்பாகச் செயற்படுவார் என நம்புகிறேன். கடந்த தொடரில் சுழலில் அசத்திய சுனில் நரைன் இந்த முறையும் கைகொடுப்பார். பாலாஜி, ரஜத் பாட்யா உள்ளிட்டோரும் பந்துவீச்சில் நம்பிக்கை அளிக்கிறார்கள்'' என்றார். (ந)


# போராடி வென்றது இலங்கை

யாழ்ப்பாணம், ஏப். 01

பங்களாதேஷுக்கு எதிரான '20/20' போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னர் 17 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கியது இலங்கை.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு '20/20' போட்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்ஷான் குணவீர 5 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் டினேஸ் சந்திமால் 9 ஓட்டங்களுடனும், திரிமன்னே 5 ஓட்டங்களுடனும் வெளியேற இலங்கை அணி தடுமாறிக்கொண்டிருந்தது. ஆயினும் மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான குஷால் பெரேரா அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்து இலங்கை அணியின் நிலையை ஸ்திரப் படுத்தினார். அவர் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்று மஹமதுல்லாவின் பந்தில் வீழ்ந்தார். பின்னர் மத்தியூஸும் ஜீவன் மென்டிஸும் இணைந்து அதிரடியில் கலக்கினர். 3 சிக்ஸர்கள் அடங்கலாக 37 ஓட்டங்களுடன் மென்டிஸ் ஆட்டமிழக்க வந்தார் திஸ்ஸர பெரேரா. மறுமுனையில் பந்துகளுக்கு ஏற்ற வகையில் மத்தியூஸ் நிதான ஆட்டத்தில் இறங்க, வான வேடிக்கை காட்டினார் பெரேரா. இதனால் இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை கடுகதியில் இருந்தது. 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களைக் குவித்தது. மத்தியூஸ் 30 ஓட்டங்களுடனும், திஸ்ஸர பெரேரா 7 பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள் அடங்கலாக 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.



குஷால் பெரேரா


199 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கிப் பதிலளித்தாடிய பங்களாதேஷ் அணியின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மான் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்த போதும் ஏனைய வீரர்கள் பொறுப்புடன் ஆட பங்களாதேஷ் அணி வெற்றி பெறும் நிலை உருவானது. எனினும் இறுதிக்கட்டத்தில் அந்த அணி இலக்குகளை



அடுத்தடுத்து இழந்ததால் 20 பந்துப்பரிமாற்ற நிறைவில் 7 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது. இதனால் பங்களாதேஷ் 17 ஓட்டங்களால் வெற்றியைப் பறிகொடுத்தது. பங்களாதேஷ் அணி சார்பில் அஷ்ரபுல் 43 ஓட்டங்களையும், அணித் தலைவர் முஷ்பிஹீர் ரஹீம் 39 ஓட்டங்களையும், மஹமதுல்லா 31 ஓட்டங்களையும், மொமினுல்ஹக் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மத்தியூஸ், திஸர பெரேரா ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக குஷல் பெரேரா தெரிவானார். (ந)

# சாதனைச் சம்பியன்




மியாமி மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் தொடரில், ஆறாவது முறையாக சம்பியன் பட்டம் வென்று, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் புதிய சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் மியாமி மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், உலகின் இரண்டாம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுடன் மோதினர். இதில் முதல் செற்றை செரினா 4:6 என இழந்தார்.

பின் எழுச்சிகண்ட செரினா, இரண்டாவது செற்றை 6:3 என வென்று பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை அசத்திய செரினா 6:0 என சுலபமாக வென்றார்.

முடிவில், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 4:6, 6:3, 6:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று ஆறாவது முறையாக மியாமி பகிரங்க ரென்னிஸ் தொடரில் சம்பியனாகி சாதனை படைத்தார். (ந)

# நினைவு திரும்பியது



மர்ம நபர்களால் தாக்கப்பட்ட நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடருக்கு நினைவு திரும்பியுள்ளது. ''கோமா' நிலையில் இருந்து மீண்ட இவர், தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் உரையாடுமளவுக்கு நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நியூஸிலாந்து அணி வீரர் ஜெசி ரைடர் (வயது-28). சமீபத்தில் இவர், கிறைஸ்ட்சர்ச்சில் உள்ள மதுபான சாலையில்குடித்துவிட்டு

வெளியே வந்தபோது, மர்ம நபர்கள் சிலர் அவரது தலையில் பலமாக தாக்கினர். இதில் ஜெசிரைடரில் மண்டை ஓடு எலும்பு முறிந்தது. நுரையீரலும் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக 'கோமா' நிலைக்கு தள்ளப்பட்டார் அவர். ரைடருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

'கோமா' நிலையில் இருந்து மீண்ட இவர், தனது குடும்பத்தினருடன் சிறிது நேரம் உரையாடியுள்ளார்.

இதுகுறித்து ஜெசி ரைடரின் முகாமையாளர் ஆரோன் கிலீ கூறுகையில், ஜெசி ரைடரின் உடல் நிலையில் நாளுக்கு நாள் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. 'கோமா' நிலையில் இருந்த இவருக்கு நினைவு திரும்பியுள்ளது. தற்போது ரைடர் செயற்கை வாயு இல்லாமல் சுவாசிக்கிறார். சிறிது நேரம் தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பேசினார். இவருடைய இந்த முன்னேற்றம் எங்களுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. இருப்பினும் இவர் முழுமையாக குணமடைய நீண்ட நாள்கள் தேவைப்படும் எனத் தெரிகிறது'' என்றார்.

இதேவேளை ஜெசி ரைடரை தாக்கிய இருவரை நியூஸிலாந்து பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். (ந)

**அன்பு வாசகர்களே!**

உதயனில் பிரசுரமாகியிருந்த முட்டாள்கள் நாள் செய்திகளைத் தேடிப்பிடித்து உங்களை நீங்களே பாராட்டிக் கொண்டீர்களா!

உண்மையில் முட்டாள்கள் நாளையொட்டி உங்களை எச்சரித்த செய்தி மட்டுமே முட்டாள்கள் நாளுக்கானது. வேறு எந்தச் செய்தியும் முட்டாள்கள் நாளுக்காக பிரசுரிக்கப்படவில்லை.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

**French** மொழி கற்பிப்பதற்கு **French Embassy** ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் **Alliance Française de Jaffna** *மட்டுமே.* இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## மரண அறிவித்தல்கள்



### *சிவலிங்கம் சதானந்தன்* B.Sc

*(இளைப்பாறிய ஆசிரியர், கல்கிசை சென். தோமஸ் கல்லூரி)*

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிரதானவீதி இல 134ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சதானந்தன் நேற்று (31.03.2013) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் (பிரசித்த நொத்தாரிசு, யாழ்ப்பாணம்) ஜெயலெட்சுமி தம்பதியரின் சிரேஸ்ர புத்திரனும், திருமதி விஜயகுலராணி வடிவேலன் (ஆஸ்திரேலியா), திருமதி நிர்மலாதேவி செல்வச்சீராளன் (ஜேர்மனி), திருமதி ரோகினிதேவி திருமங்களேஸ்வரன், திருமதி திருமகள் ஜீவா (கனடா), இளம்பூரணன், காலஞ்சென்ற இளங்கோவன் மற்றும் இளங்கீரன் (பிரசித்த நொத்தாரிசு யாழ்ப்பாணம், இளைப்பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), அ'திஸ்டதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தர் வடிவேலன், செல்லையா செல்வச்சீராளன், விசுவலிங்கம் திருமங்களேஸ்வரன், முத்துலிங்கம் ஜீவா, திருமதி ஜெகநாயகி இளங்கீரன் (ஆசிரியர் யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல134, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 0771686300 (35545)

தகவல்:
சி.இளங்கீரன் (சகோதரன்)

### திருமதி சிவமலர் சுப்பிரமணியம்



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலிதெற்கு, கரந்தன் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவமலர் நேற்றுமுன்தினம் (30.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -வீரலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கதிரேசு-பூரணம் தம்பதியரின் அன்பு மரு மகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சாரணியாவின் (மாணவி யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.03.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் சந்தி,
நீர்வேலி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9492760

**தரம் 5 புலமைப்பரிசில்**
**மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது**

**வெற்றிச்சிகரம்**
பிரதி ரூ.20
மாதிரி வினாத்தாள்கள், விடையுடன்

ஆக்கம்: திருகோணமலை S.கணேசலிங்கம்
யாழ்நகரில் அன்னை புத்தகசாலை - 021 2229881
**வெளியீடு : யுனிலங்காஸ் - 077 6258778**

முன்னணி ஆசிரியர்களின் யுனிலங்காஸ் வெளியீடுகள்

1. சுற்றாடல் சங்கமம் — S.சுதர்சன் (வவுனியா)
2. அடிப்படைத் தமிழ் வழிகாட்டி — M.சுகந்தன் (காரைநகர்)
3. கட்டுரைச் சங்கமம் — M.சுகந்தன் (காரைநகர்)
4. கணித விவேக வழிகாட்டி — M.ஷபான் (அக்கரைப்பற்று)
5. புலமைச்சங்கமம் — S.சுதர்சன்

எல்லா புத்தகசாலையிலும் கிடைக்கும்

**மணல் மண் வேண்டுமா?**

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

**4½ டிரக்டர் 20,500/-**

தொடர்பு:- **ராம்** (23-34166)
**072 63 78 546**

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
021 5671111

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகர எல்லைக்குள் 4அறைகளுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனம், அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு- 077 5160291

## 'உதயன்' இணைய வானொலியின் ஓராண்டு பூர்த்தியினை முன்னிட்டு மாபெரும் கலை, இலக்கிய போட்டிகள்

### கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், நேர்காணல், ஆக்கப் பாடல்

**ஆகிய துறைகளில் ஆக்கம் பிரதிவடிவமாகவும், ஒலிவடிவமாகவும் நடத்தப்படவுள்ளன.**

| | |
|---|---|
| கவிதைகள் | (ஆக்கப்பிரதி) எழுத்துத் தாளில் 3பக்கத்துக்கு குறையாமலும் 4 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| சிறுகதை | (ஆக்கப்பிரதி) 4 பக்கத்துக்கு குறையாமலும் 5 பங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| வானொலி நாடகம் | (ஆக்கப்பிரதி) எழுத்துத்தாளில் 12 பக்கத்துக்கு குறையாமலும் 13 பக்கத்துக்கு மேற்படாமலும் அமையவேண்டும். (ஒலிவடிவம்) பாத்திரங்களின் நடிப்பு, இசையுடன் 20 நிமிடத்துக்குட்படாமலும் 25 நிமிடத்துக்கு மேற்பட மாலும் இருத்தல் வேண்டும். |
| நேர்காணல் | (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்குட்படாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| ஆக்கப் பாடல் | (ஒலிவடிவம்) 5 நிமிடத்துக்குட்படாமலும் 7 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். |

### போட்டிகள்:

பாடசாலை மட்டத்திலும், சமூகமட்டத்திலும் இருபிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

- ஒருவர் எத்தனை பிரதிகளும் அனுப்பலாம்
- உங்கள் ஆக்கங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஏப்ரல் 25.2013 இக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி:*

1. அஞ்சல் முகவரி:
**Online Uthayan**
**இலக்கம்: 357,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

2. மின்னஞ்சல்
**radio@uthayan.com**

**மேலதிக விவரங்களுக்கு எமது கலையக தொலைபேசி இலக்கம் 021 567 2247 உடன் தொடர்புகொள்ளவும்.**

ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், 2ஆம், 3ஆம் இடத்தினை பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(சி/7168) (45.6.7)

## 'உதயன்' இணைய வானொலி ஓராண்டு பூர்த்தியினை முன்னிட்டு மாபெரும் கைப்பணிப் போட்டிகள் - ஏப்ரல்-2013

- ★ நீத்துப்பெட்டி இழைத்தல்
- ★ குட்டான் இழைத்தல்
- ★ கிடுகு பின்னுதல்
- ★ பாய் இழைத்தல்
- ★ தேங்காய் துருவுதுல்
- ★ விளக்குமாறு [செய்தல்]
- ★ மரம் ஏறுதல் [பனை, தென்னை]

போன்ற போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள், **ஏப்ரல் 08ஆம் திகதிக்கு முன்னதாக** தங்களது விண்ணப்பங் களை எமக்குக்கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**இல. 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி : radio@uthayan.com

ஒவ்வொரு போட்டிகளிலும் **முதலாம், 2ஆம், 3ஆம் நிலைகளை பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்** வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆறுதல் பரிசுகளும் உண்டு.

**போட்டி திகதி:**

| | |
|---|---|
| வடமராட்சி | ஏப்ரல் 13 |
| தென்மராட்சி | ஏப்ரல் 20 |
| வலிகாமம் | ஏப்ரல் 21 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.